Koviloor Digital Library

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

91/1



நாற்புறமும் ஒளிபரவ நல்லரவம் குடைபிடிக்கப்
பாற்கடலில் துயில்கொள்ளும் பரந்தாமன் வருகின்றான்
மோனமுறும் பக்தியினால் முப்போதும் வழிபட்டு
ஞானமெனும் வெண்ணெய்பெற நாட்டவரே! வாருங்கள்.

ஜூன் 1986

Koviloor Digital Library

ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

SREE VISALAM CHIT FUND LTD. REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம் : திருநெல்வேலி-627006 தொலைபேசி : 3474

நிர்வாக அலுவலகம்: பள்ளத்தூர்-623107 தொலைபேசி: 72 & 108

மத்திய அலுவலகம் : சென்னை-600 002.
தொலைபேசி : 89244 & 87886

தென்னகத்தில் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒப்பற்ற சீட்டு நிறுவனம்

4 மாநிலங்கள் 70 கிளைகள் 38 ஆண்டு சேவை

நிதி நிலைமை 31—3—85ல் உள்ளபடி
(தணிக்கை செய்யப்பெற்றது)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25.00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வ் நிதியும்	ரூ. 8.52 லட்சம்
ஆஸ்திகள்	ரூ. 16.47 கோடிக்கு மேல்
சீட்டு நடைமுறை நிதி	ரூ. 23.72 கோடிக்கு மேல்

டைரக்டர்கள் Dr. L. RM. அருணாசலம் B.E., M.E.(PH) M.I.E
(வெளி டைரக்டர்) S. Pr. ராமஸ்வாமி M A.
ஆலோசகர் : VE. AL. சின்ன அழகப்பன்

எங்கள் 70 கிளைகள் மூலமாக பல்வேறு மதிப்புள்ள மாதம் ஒருமுறை, இருமுறை, மும்முறை, தினசரிச்சீட்டுகள் நடத்தி வருகிறோம். மேலும் ரூ. 25,000/- முதல் ரூ. 2,00,000/- வரை உயர் மதிப்புள்ள சீட்டுகளைப் பிராந்திய குரூப்புகளாக எங்கள் சென்னை மத்திய அலுவலகம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி பெங்களூர், காரைக்குடி, பாண்டிச்சேரி கிளைகளில் நடத்தி வருகிறோம்.

Dr. L. RM. அருணாசலம் B.E., M.E., (PH) M.I.E.
பொதுஜன தொடர்பு அதிகாரி

AR. பழனியப்பன்
நிர்வாக அதிகாரி

RM. அருணாசலம்
நிர்வாக இயக்குநர்

Koviloor Digital Library

KOVILOOR MADAM LIBRARY, KOVILOOR
A. No. 45772

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 5
ஒலி 5
அட்சய வைகாசி
ஜூன் 1986

கௌரவ ஆசிரியர் :
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர் :
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்
சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.
தொலைபேசி : p. p. 26668

சீதக் கடலுள் அமுதன்ன தேவகி
கோதைக் குழலான் யசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே !
பவள வாயீர் ! வந்து காணீரே ! —பெரியாழ்வார்

தனி இதழ் ரூ. 1-25 ❖ ஆண்டுச் சந்தா ரூ. 15-00

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

Koviloor Digital Library

மணிவிழா

அலவாக்கோட்டை தெ. மு. ராம. அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்கும் திருமதி சோம. கணணத்தாள் ஆச்சி அவர்களுக்கும் 7-5-86 அன்று அலவாக்கோட்டையில் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழாச் சிறப்பாக நடைபெற்றது

திருச்சி சங்கத்தில் சிறப்புக் கூட்டம்

திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கத்தின் புத்தாண்டுச் சிறப்புக் கூட்டம் 4-5-86 அன்று திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில நடைபெற்றது கூட்டத்திற்கு சங்கத் தலைவர் எஸ். அண்ணாமலை அவர்கள் தலைமையேற்றார்கள்.

சங்கத்தில் 14 ஆண்டுகளாக கணக்கராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற கல்லல் திரு சொ. மாணிக்கம் செட்டியாரை சங்கத்தின் சார்பில் துணைத் தலைவர் திரு. எல். என். லெட்சுமணன் பாராட்டி பட்டாடை அணிவித்து ஓய்வூதியமாக ரூ. 1501-ம் வழங்கினார். அதனையடுத்துச் சிறப்புச் சொற்பொழிவுகள் தொடங்கின. 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் 'நாம் எங்கே போகிறோம்?' என்ற தலைப்பில் பேசினார். அடுத்து டாக்டர் தமிழண்ணல் அவர்களை ஏ. வி. கே. ஆ வி ச் சி செட்டியார் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். 'சிலப்பதிகாரத்தில் நகரத்தார் மரபு' என்ற தலைப்பில் டாக்டர் தமிழண்ணல் பேசியபோது, நகரத்தார் திருமணச் சடங்குகள் இளங்கோவடிகள் காலத்து நடைமுறைக்கு எவ்வாறு இணைந்திருந்தது என்பதைத் தக்க சான்றுகளுடனும் விளக்கினார்கள்.

செயலாளர் திரு எஸ். சண்முகம் நன்றி கூற நாட்டு வாழ்த்துடன் கூட்டம் நிறைவேறியது. வந்திருந்தோர் அனைவருக்கும் மாலையில் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

திருமணம்

வலையபட்டி நா. வெ. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அங்கப்பன் என்ற செல்வம் B. Sc. (M. A.)க்கும் அதே ஊரைச் சேர்ந்த சித. கும. சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி சிகப்பிக்கும் 14—3—86 அன்று மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. 29-3-86 அன்று நெய்வேலியில் மணமக்களுக்கு வரவேற்பளிக்கப் பெற்றது.

மனதிற்குப் பிடித்த, தாம்மிக்க செட்டிநாட்டு
எவர்சில்வர் சாமான்கள் வாங்குவதற்குச்
சிறந்த நிறுவனம் :

அங்கயற்கண்ணி
எவர்சில்வர் எம்போரியம்

22, மீனாட்சி கோவில் தெரு, மதுரை.

போன்: 26975

உரிமையாளர்: கா. சண்முகம், கல்லல்

Koviloor Digital Library

ஒன்பது நகரக் கோயில் சுற்றுலா !

மதுரை நகர விடுதியிலிருந்து 6-7-1986 ஞாயிறன்று காலை 5–30 மணிக்குப் புறப்பட்டு பேருந்து மூலம் ஒன்பது நகரக் கோயில்களுக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்து வர மதுரை சுபம் டிராவல் ஏஜன்ஸி ஏற்பாடு களைச் செய்து வருகிறது

இச் சுற்றுலாவிற்கு பேருந் துக் கட்டணம், நானகு வேளை ஆகாரம் மற்றும் சிலவுகள் உட்பட நபர் ஒன்றுக்கு ரூ, 55-00 என்று நிர்ணயம் செய்யப் பெற்றுள்ளது. சுற்றுலா சென்றுவர விரும்பு வோர்,

சுபம் டிராவல் ஏஜன்ஸி
226, நாயக்கர் புதுத் தெரு
மதுரை-625 001

தொலைபேசி : 22712

நகரத்தார் சங்கம்
25, வடக்குச் சித்திரை வீதி
மதுரை-625 001

தொலைபேசி : 26668

ஆகிய இரண்டு இடங்களில் ஏதாவது ஒரிடத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள் ளலாமென அறிவித்திருக் கிறார்கள்

திருமணம்

சென்னை. ஸ்மால் காஸ் நீதி மன்றத்தின் உயர் நீதிபதி, கல்லல் என். பழநியப்ப செட்டி யார் அவர்களின் புதல்வி செல்வி கண்ணுத்தாள் என்ற சுமதி B. Sc., க்கும் கல்லுப்பட்டி வி. எம். எஸ். ஸ்ரீ நிவாசன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் எஸ். எஸ். வெங்கடாசலம் B. Com. ,C.G.T.க் கும்28-5-86 அன்று கல்லலில் திரு மணம் சிறப்பாக நடைபெற்றது.

இத் திருமணத்தையொட்டி வாழ்த்தரங்கம் நடைபெற்றது. முன்னதாக 'மக்கள் கவிஞர்' திரு அரு. நாகப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். மணமக்களை வாழ்த்தி முன்னாள் தமிழகச் சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் திரு. ஜி. எஸ். ரமணன் (D. I. G. of Police), பேராசிரியர் திரு. சொ. சத்தியசீலன் ஆகியோர் பேசினர். நீதிபதி திரு என் பழநியப்பன் நன்றி நவின்றார்

நாட்டரசன் -கோட்டையில் நகரத்தார் பொது நலச் சங்கம்

நாட்டரசன்கோட்டையில் உள்ள நகரத்தார் மாளிகையில் 15-5-86 அன்று நகரத்தார்களின் கூட்டம் நடைபெற்றது. அப்போது ஊர் நன்மை, நகரத்தார் நன்மை கருதி 'நகரத்தார் பொது நலச் சங்கம்' என்ற அமைப்பை ஏற்ப டுத்துவதென முடிவு செய்யப் பெற்று அதற்குச் செயற்குழுவும் அமைக்கப் பெற்றது.

திரு சுப. ராம. லெ. இராம கிருஷ்ணன் செட்டியார் தலைவ ராகவும் திரு. அரு. சேவு. கரு. ஆவிச்சி செட்டியார் உதவித் தலைவராகவும் திரு. ப. ப. வே. அண்ணாமலைச் செட்டியார் செய லாளராகவும் திரு. கண. மெ. நா. சொக்கலிங்கம் செட்டியார் பொருளாளராகவும் போட்டி யின்றி ஏக மனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர். மற்றும் 14 பேர் செயற்குழு உறுப்பினர் களாக ஏக மனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.

நகரத்தார் பொது நலச் சங் கத்தின் முதற் கூட்டம் 24-5-86 சனியன்று நடைபெற்றது. நகரத் தார் மாளிகையில் இச்சங்கம் செயல்படும் எனவும் தெரிவிக்கப் பெற்றது.

Koviloor Digital Library

பிள்ளையார் சுழி பற்றி ஒரு விளக்கம்

'நகரத்தார் குரல்' மார்ச்'86 இதழில் பிள்ளையார் சுழியைப் பற்றி தேவகோட்டை கே. ஆர். பழநியப்பன் அவர்கள் எழுதிய விளக்கத்தைப் பார்த்தேன். எனக்குத் தெரிந்த விளக்கத்தைக் கீழே கொடுத்துள்ளேன்.

பிள்ளையார் சுழியின் பொருள்:

உ சுழி—கூவி எரிகின்ற நெருப்பு. கோடு-பள்ளத்தில் நிற்கும் தண்ணீர்.
இவை சிவலிங்கவடிவமாகும்

உ சுழி—சி—சிவன்
கோடு—வ—சக்தி

இவை சிவச்சுழி. அதை நாம் பிள்ளையார் சுழியாகப் பாவிக்கிறோம்.

அ.அ.ராம. சுப்பையா செட்டியார்
கோட்டையூர்

திருமணம்

பொன். புதுப்பட்டி மு. பெ. மு. சே. சுந்தரம் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி கல்யாணி என்ற உஷா B. Sc.,க்கும் வேந்தன்பட்டி மு. முத்து. ராம. மெய்யப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் இராமநாதன் B. Com.. க்கும் 22-5-86 அன்று பொன். புதுப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

சில வெண்பா நூல்கள் !

நூற்பெயர்		இயற்றியவர்
நளவெண்பா	—	புகழேந்தியார்
புறப்பொருள் வெண்பா மாலை	—	ஐயனாரிதனார்
திருக்குறள்	—	திருவள்ளுவர்
முத்தொள்ளாயிரம்	—	பலர் பாடியது
நாலடியார்	—	சமண முனிவர்கள்
பழமொழி நானூறு	—	சமண முனிவர்கள்
திருஈங்கோய் எழுபது	—	நக்கீரர்
கயிலைபாதி காளத்தி பாதி வெண்பா	—	நக்கீரர்
திருநெல்லைச் சிலேடை வெண்பா	—	வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்
மூதுரை	—	ஔவையார்
நல்வழி	—	ஔவையார்
நன்னெறி	—	சிவப்பிரகாச சுவாமிகள்
நீதிநெறிவிளக்கம்	—	குமரகுருபர சுவாமிகள்
அறநெறிச்சாரம்	—	முனைப்பாடியார்
அண்ணாமலை வெண்பா	—	குகை நமசிவாயர்
காந்திக் குறள் வெண்பா	—	தமிழ்க் கடல் இராய. சொ.
செந்திலாண்டவன் துதியமுது	—	கோவை 'சிவக்கவி மணி' சி. கே சுப்பிரமணியனார்.
கொடைவிளக்கு	—	டாக்டர் வ. சுப. மாணிக்கனார்
முருகன்	—	டாக்டர் அர. சிங்கார வடிவேலனார்
நல்லுரை வெண்பா	—	கவிஞர் ரெ. முத்துக்கணேசனார்
ஸ்ரீ கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி	—	கவிஞர் இராகவன் முத்து

—தொகுப்பு : கவிஞர் இராகவன் முத்து

Koviloor Digital Library

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்

—7—

என் பாட்டனார் வ. நா. வ. வள்ளியப்ப செட்டியார் அவர்களுக்கு மூன்று குமாரர்கள். மூத்தவர்கள் எனது தந்தையார் நாகப்ப செட்டியார் அவர்கள். இரண்டாவது எனது சிறிய தந்தையார் லெட்சுமணன் செட்டியார் அவர்கள். மூன்றுவது சிதம்பரம் செட்டியார் அவர்கள். லெட்சுமணன் செட்டியார் அவர்கள் இளமைக் காலத்தில் மலேசியாவில் பத்துபகாட்டில் படித்தார்கள். பிறகு இந்தியாவில் பேட்மிண்ட்டன் விளையாட்டில் மிக ஆர்வம் காட்டி நல்ல விளையாட்டு வீரராகத் திகழ்ந்து பல போட்டிகளில் வென்று பரிசுகள் பெற்றிருக்கிறார்கள். அப்போது செட்டிநாட்டில் எங்கு பார்த்தாலும் பேட்மிண்ட்டன் டோர்னமெண்ட்டுகள் நடைபெறும். அவர்கள் விளையாடுகின்ற

மலேஷியாவில் திரு. நா. வ சிதம்பரம் செட்டியார்(ராங்கியம்), வ. நா. சிதம்பரம் செட்டியார் (ராங்கியம்), எம்பார் விஜயராகவாச்சாரியார்.

Koviloor Digital Library

பொழுது நானும் எனது வயதை ஒத்த சிறுவர்களும் பந்துகளை எடுத்துப் போடுவது வழக்கம்

லெட்சுமணன் செட்டியார் அவர்களுக்கு வேட்டைக்குச் செல்வது, போட்டோ எடுப்பது, முதலியவைகளில் ஆர்வம்அதிகம். கார் ஓட்டுவதில் மிகவும் வல்லவர்கள். அவர்கள் கார் ஓட்டுகிற போது அதில் அமர்ந்து செல்லும் நமக்குக் கிடைக்கும் சுகமே தனி. எனக்குக் கார் ஓட்டக் கற்றுக் கொடுத்ததும் போட்டோக் கலையைக் கற்றுக் கொடுத்ததும் பேட்மிண்ட்டன், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களில் ஆர்வமூட்டியதும் எனது சிறிய தந்தையார் லெட்சுமணன் செட்டியார் அவர்கள்தான். ஆனால், வேட்டைக்குச் செல்வதில் மட்டும் எனக்கு ஆர்வம் ஏற்படவில்லை. அவர்கள் வேட்டையாடுகின்ற போது சுட்டு வீழ்த்தும் பறவைகளை நான் எடுத்துக்கொண்டு வருவேன். அவர்கள் சுட்ட பறவைகளை சமைத்துச் சாப்பிட மட்டும் சென்று வருவேன்.

அவர்கள் ஆன்மீகத்திலும், இலக்கியத்திலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பட்டத்துக்கு வந்தவுடன், கூடவே இருந்து தொண்டு செய்தவர்களில் எனது சிறிய தந்தையாருக்குப் பெரும் பங்கு உண்டு. எந்த நேரமும் நண்பர்கள் புடைசூழ இருப்பார்கள். ஜெமினிகணேசன் அவர்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர். இருவரும் கிரிக்கெட் விளையாடுவார்கள். ஜெமினி திரைப்படத் துறையில் பிரபலம் அடைந்த பிறகு எனது சிறிய தந்தையார் அவரைச் சந்திக்க வேயில்லை. ஒருமுறை ஜெமினி என்னைப்பார்த்து ''உங்கள் சித்தப்பாவை நான் பார்க்க விரும்புகிறேன்'' என்றார். பிறகு ஒரு முறை சென்னையில் எல்லோரும் ஒன்றாகச் சந்தித்தபோது ஜெமினி சாவித்திரி உட்பட நண்பர்கள் அனைவரையும் அழைத்து எனது சிறிய தந்தையார் பெரிய விருந்து கொடுத்துக் கௌரவித்தார்கள். அப்படிக் கலகலப்பாக இருந்த எனது சிறிய தந்தையார் அவர்கள் இப்போது, மைசூரில் ஒரு காப்பித்தோட்டத்தை வாங்கி வைத்துக் கொண்டு கூடுமான வரை தோட்டத்திலேயே இருந்து பரபரப்பு இல்லாத வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

மற்றொரு சிறிய தந்தையார் சிதம்பரம் செட்டியார் அவர்கள் இளம் வயதில் திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு இருந்ததோடு தந்தை பெரியாரின் முழு அன்பிற்குப் பாத்திரமாக விளங்கினார்கள். நடிகவேள் எம். ஆர். இராதா எனது சிறிய தந்தையார் சொல்லி அனுப்பினால் பணம் வாங்காமலேயே நாடகம் நடத்தித் தருவார். என் சிறிய தந்தையார் அடிக்கடி எங்கள் ஊரான ராங்கியத்தில் எம். ஆர். இராதாவின் நாடகத்தை நடத்துவார்கள். ஈ. வெ. ரா. பெரியாரையும் மற்ற பகுத்தறிவாளர்களையும் அடிக்கடி அழைத்து வந்து கூட்டம் நடத்துவார்கள். என்னுடைய பாட்டனார் வள்ளியப்ப செட்டியார் அவர்கள் ராங்கியத்தில் ராஜகோபுரம் அமைத்து ஒரு பிள்ளையார் கோயில் கட்டி இருக்கிறார்கள். எனது தந்தையாரும் தம்பி பாதைமாறிச் செல்வது கண்டு வேதனையோடு இருப்பார்கள். என் அப்பத்தாள் வள்ளியம்மை ஆச்சி அவர்களும் எந்த நேரமும் கோயிலில்தான் இருப்பார்கள். அவர்கள் ''என் மூன்றாவது மகன்தான் ஆன்மீகத்தில் சிறந்து விளங்குவான்; கோயில் கட்டுவான்'' என்று நம்பிக்கையோடு சொல்வார்கள் அதை அருகில் இருந்து கேட்கும் எனது சிறிய தந்தையாரும் மறுப்பு ஏதும் கூறாமல் சிரித்துக் கொள்வார்கள். அவர்களுக்கு பேட்மிண்டன், டென்னிஸ் முதலிய விளையாட்டுக்களில் விருப்பம் இருந்த

Koviloor Digital Library

தோடு, வெயிட் லிப்டிங்கில் மிகச் சிறந்து விளங்கினார்கள். அடிக்கடி வேட்டைக்குச் சென்று வருவார்கள். உடல் கட்டுப்பாடும், மனக் கட்டுப்பாடும் மிக அதிகம். கோபமே வராது. விட்டுக் கொடுக்கும் தன்மை இயற்கையிலேயே உண்டு.

நாங்கள் எல்லோரும் 1954ல் மலேசியாவில் வசித்து வந்தோம் அப்போது பெரியார் ஈ வெ ரா கப்பலில் பினங்கு வந்து இறங்கினார்கள். எனது சிறிய தந்தையார் NASH என்ற படகுபோல் உள்ள ஒரு காரை விலைக்கு வாங்கிக் கொண்டு ஈ வெ ரா வை வரவேற்க பினங்கிற்குச் சென்றார்கள் ஈ வெ ரா வின் மலேசியச் சுற்றுப் பயணம் முழுவதும் எனது சிறிய தந்தையாரின் பொறுப்பில்தான் நடந்தது. பெரியார் மேடையில் பேசுசின்றபோது, எதிரியைக் கடுமையாகச் சாடுவார்கள். ஆனால், தனியாகப் பேசும்போது அவர் காட்டுகின்ற மரியாதை, பண்பு நமக்கே மெய்சிலிர்க்க வைக்கும். சாப்பிடும்பொழுது பிரியாணி கண்டிப்பாக அவருக்கு இருக்க வேண்டும். எனது சிறிய தந்தையாரை அழைத்து குழந்தையைப் போல் அருகில் அமரச் செய்து தட்டிக் கொடுத்துக் கொண்டே அவர் சாப்பிடும் காட்சி காணக் கிடைக்காத காட்சியாகும். அவ்வளவு அன்பாகப் பழகுவார்கள். அப்படிப் பகுத்தறிவுக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்ட எனது சிறிய தந்தையாருக்கு மலேசியாவில் எங்கள் கடையில் மேலாளராகப் பணிபுரிந்த புலவர் மணி சித்தாந்த வித்தகர் முரு. பழ. ரெத்தினம் செட்டியார் அவர்களுடன் ஆன்மீகத்தைப் பற்றியும் பகுத்தறிவைப் பற்றியும் விவாதிக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. இந்த நேரத்தில் சுவாமி சித்பவானந்தா அவர்கள் மலேசியாவிற்கு விஜயம் செய்தார்கள். அப்போது எனது சிறிய தந்தையாரை பகுத்தறிவுக் கொள்கையிலிருந்து ஆன்மீகத்திற்கு மாற்றிய பெருமை சுவாமி சித்பவானந்தா அவர்களைச் சாரும். அச்சமயம் மலேசியச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட மரியாதைக்குரிய பாலகவி வே. ராமநாதன் செட்டியார் அவர்கள் எனது சிறிய தந்தையார் சிதம்பரம் செட்டியார் அவர்களை முழுமையாக ஆன்மீகத்திற்கு மாற்றி அவர்களுக்குச் சிவ தீட்சை செய்து வைத்தார்கள். 1960ல் சிவ தீட்சை பெற்றவர்கள் இன்று வரை நெறி தவறாது சிவபூஜை செய்து வருகிறார்கள். 1966–ஆம் ஆண்டு எங்கள் குடும்பக் கோவிலான ஸ்ரீ சிதம்பர விநாயகர் கோவிலின் கும்பாபிஷேகத்தில் கும்பாபிஷேகக் குழுத் தலைவராக இருந்து சிறந்த பணியாற்றினார்கள். ஒருநாள் மூவாரிலிருந்து கோலம்பிலாவுக்கு ஒரு வேலையாகச் சென்று இருந்தோம். இரவே திரும்புகிற எண்ணத்தில் சென்றிருந்ததால் பூஜைப் பெட்டியை அவர்கள் எடுத்துக் கொண்டு செல்லவில்லை. சென்ற இடத்தில் வேலை முடியாததால் மறுநாள் மாலையில்தான் மூவாருக்குத் திரும்பினோம். காலையிலிருந்து மூவாருக்குத் திரும்பி வந்து பூஜை செய்கின்றவரை அவர்கள் தண்ணீர் கூட அருந்தாமல் இருந்தார்கள். பூஜை செய்த பிறகு தான் உணவு அருந்தினார்கள். அவ்வளவு கடுமையாக விரதம் இருந்து வருகிறார்கள். இப்போதும் விளம்பரம் இல்லாமல் புதுக் கோட்டையில் இருந்து வருகிறார்கள். அவர்கள் பகுத்தறிவுக் கொள்கையில் இருந்தபோது ஆன்மீகவாதிகளைக் கேலிபேசியதில்லை. அதேபோல் ஆன்மீகத்துக்கு வந்த பிறகு பகுத்தறிவாளர்களை குறை சொல்வதும் இல்லை இது நான் அவர்களிடத்தில் கண்ட சிறப்பு. நிறைகுடம் தளும்பாது என்பதற்கு அவர்கள் ஒரு உதாரணம், ஆக என் அப்பத்தாள் வள்ளியம்மை ஆச்சி கண்ட கனவு, நினைவாகியது

(வளரும்)

Koviloor Digital Library

மதுரை வங்கியின்

பரிசுப் பத்திரம்

பிறந்த நாள் — மண விழா — வளைகாப்பு
மகப்பேறு — புதுமனை புகுதல் — விழா
எதுவாயினும் மகிழ்ச்சி பொங்கிப் பெருக
மதுரை வங்கியின் பரிசுப் பத்திரம்
வழங்குங்கள்!

ரூ. 34-15க்கு நீங்கள் பரிசாக வழங்கும் பத்திரம் ரூ. 101/- ஆக, பத்தே வருடங்களில் உங்கள் நண்பர், உறவினர் அன்பைப் போல பல்கிப் பெருகுகிறது.

உங்கள் தேவைக்கேற்ப பல்வேறுபட்ட தொகைகளில் பத்திரம் கிடைக்கும்.

அவசரத் தேவைக்கு உரிய வட்டியுடன் நடுவிலே கணக்கு முடித்துப் பணம் பெறலாம்

குறைந்த செலவோ உங்களுக்கு!
நிறைந்த மகிழ்ச்சியோ பெறுபவர்க்கு!!

மதுரை வங்கி லிமிடெட்

758, அண்ணா சாலை,
சென்னை-600 002.

Koviloor Digital Library

செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ மதுரை டிவிஷன், எல் ஐ.சி. சீனியர் டிவிஷனல் மேலாளராகப் பணியாற்றி வந்த காரைக்குடியைச் சேர்ந்த திரு. எஸ். அழகப்பன் பதவி உயர்வு பெற்று, கான்பூரில் மத்திய மண்டல மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஃ பிள்ளையார்பட்டிக் கோயிலில் 30-6-85 பசலி முடிய 2855 நகரத்தார் புள்ளிகள் உள்ளனர்.

ஃ வேலங்குடிக் கோயிலில் தற்போதுள்ள நகரத்தார் புள்ளிகளின் எண்ணிக்கை 40 ஆகும். நகரக் கோயில்களிலேயே மிகக் குறைந்த புள்ளிகளை உடைய கோயில் இது.

ஃ வருமான வரித் துறை ஆணையாளர் ஏ. அருணாசலம் I. R. S. அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து ஹைதராபாத்திற்கு மாற்றப் பட்டுள்ளார்கள். இவர்கள் கானாடுகாத்தானைச் சேர்ந்தவர்கள்.

ஃ வைத்தீஸ்வரன் கோயிலுக்கு இந்த ஆண்டு வழி நடைப் பயணமாகச் சென்று வந்த ஆடவர் பெண்டிரின் எண்ணிக்கை 876 ஆகும். வண்டிகளின் எண்ணிக்கை 40 ஆகும்.

ஃ அண்ணாமலைப் பல்கலைக் கழக பொறியியல கல்லூரியின் 40-ஆம் ஆண்டு நிறைவு விழா வருகிற செப்டம்பரில் கொண்டாடப் பெறும் எனக் கூறப்படுகிறது.

ஃ கண்டவராயன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு நா அருணாசலனுக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று (14-4-86) குன்றக்குடியில் பொன்னாடை அணிவித்துப் பாராட்டியிருக்கிறார்கள்.

ஃ தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் இராஜ கோபுரம் கட்டும் திருப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஃ நாச்சியாபுரம் எஸ். வி. என். நாகப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி வர்த்தக சங்கத்தின் தலைவராகச் செயலாற்றி வருகிறார்கள்.

ஃ மதுரை அர்பன் மாவட்ட இளைஞர் காங்கிரஸின் செயலாளராக டாக்டர் என். என். கண்ணப்பன் அவர்கள் (பாகனேரி) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஃ பினாங்கு, ஈப்போ முதலிய மலேசிய நகரக் கோயில்களிலிருந்து நிதி பெற்று காரைக்குடி அருகே ஒருகோடி ரூபாய் செலவில் ஒரு மருத்துவ மனை கட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஃ தமிழக அரசும், திரு எம். ஏ. சிடி. அவர்களுடைய ஸ்பிக் நிறுவனமும் சேர்ந்து ரூ. 200 கோடி செலவில் ஒரு மின் உற்பத்தி நிலையம் தொடங்க முடிவாகியுள்ளது.

ஃ அமரர் கவியரசர் கண்ணதாசன் நினைவாக காரைக்குடியில் சுமார் 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணி மண்டபம் கட்டப்பட்டு வருவதாகத் தமிழக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் தமிழகச் சட்ட மன்றத்தில் தெரிவித்துள்ளார். கவியரசருடைய சிலையை

Koviloor Digital Library

பொது மக்கள் செய்து கொடுத்தால் அதை சென்னையில் நிறுவ அரசு இடம் ஒதுக்கித் தரும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

ஃ சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகத்துடன் இணைந்த மணிவாசகர் நூலகத்தின் திருச்சி கிளை 12-5-86 அன்று தெப்பக்குளம் பகுதியில் நந்திக் கோயில் தெரு 20-ஆம் எண் இல்லத்தில் திறந்து வைக்கப் பெற்றது.

ஃ தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் டாக்டர்ஸ் அசோசியேஷனின் தலைவராக, தேவகி மருத்துவமனை டாக்டர் கே. சொக்கலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஃ பி. அழகாபுரியைச் சேர்ந்த பேராசிரியர் திரு தே. சொக்கலிங்கம் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் பணியாற்றி வருகிறார். இவர் 'பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள்' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

ஃ 'காசி ஸ்ரீ' திரு அரு. சோமசுந்தரன் எழுதியுள்ள 'இராமேஸ்வரம் முதல் காசி வரை' என்ற வழி நடைப் பயண நூல் 15-8-86 சுதந்திர தினத்தன்று சென்னையில் வெளியிடப்பட இருக்கிறது.

ஃ அமரர் பள்ளத்தூர் அ.மு.மு. வெள்ளையன் செட்டியார் அவர்கள் 1935 முதல் 1941 வரை பர்மாவில் சட்ட மன்ற உறுப்பினராகத் தொண்டாற்றியிருக்கிறார்கள்.

ஃ நகாத்தார் இளைஞர்கள் பர்மாவில் தொடங்கிய 'கம்பைத் தனவைசியர் கல்விக் கழக'த்தை மகாத்மா காந்தியடிகள் 19-9-1928-ல் திறந்து வைத்திருக்கிறார்.

ஃ நடராஜபுரம் இராம. முருகப்ப செட்டியார் அவர்கள் இராமேஸ்வரத்தில் உள்ள இராமநாதசுவாமி திருக்கோயிலின் அறங்காவலராக மூன்றாண்டுகள் சேவை செய்தவர்கள்.

ஃ தேவகோட்டையைச் சேர்ந்த திரு கண. சிற்சபேசன் சக்தி பைனான்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளராகப் பணியாற்றி வருகிறார்.

ஃ அகில இந்திய வானொலியின் சென்னை நிலையத்தில் நிகழ்ச்சி அமைப்பாளராகப் பணியாற்றி வரும் திரு ஜெயம்கொண்டான் 22-5-86 அன்று சென்னை திருவான்மியூரில் புதுமனை புகு விழா நடத்தியுள்ளார்.

ஃ அமரர் ஸ்ரீலஸ்ரீ குட்டையஞான தேசிக சுவாமிகள் தேவகோட்டையில் ஐந்து வீட்டார்

அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

தரமான மில் போர்டு & ஸ்ட்ரா போர்டு
வாங்குவதற்குச் சிறந்த நிறுவனம்:

மீனா பேப்பர் புராடக்ட்ஸ்

9, சிட்கோ தொழிற்பேட்டை
பரமக்குடி - 623 707

Koviloor Digital Library

என்னும் கருப்பஞ் செட்டியார் வம்சத்தில் முத்துராமன் செட்டியாருடைய நான்காவது புதல்வராகத் தோன்றியவர்.

ஃ திரு எல். வள்ளியப்பன் சென்னையில் உள்ள தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் மானேஜராகப் பணியாற்றி வருகிறார். இவர் தேவகோட்டையைச் சேர்ந்தவர்.

ஃ விராமதி சோம. வேலாயுதம் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் தாவரத் துறையில் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

ஃ அமெரிக்க நாட்டிலிருந்து வந்திருக்கும் கம்ப்யூட்டர் நிபுணர் விராமதி டாக்டர் மு. கதிரேசனுக்கும் விராமதி டாக்டர் வள்ளியம்மைக்கும் 15-5-86 அன்று விராமதி நகரத்தார் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினர்.

ஃ கோனுபட்டு பேராசிரியர் பழ. இராமசாமி அவர்கள் காசி நகரச் சத்திரத்தின் மோனஜராக நியமிக்கப் பெற்றுள்ளார்கள். 63 வயதுடைய இவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 35 ஆண்டுகள் பல்வேறு பொறுப்புக்களில் இருந்திருக்கிறார்கள். இவர்கள் ஆத்தங்குடி குன்னக்குடியான் செட்டியார் அவர்களின் மாப்பிள்ளை ஆவார்கள்.

ஃ தேவகோட்டை பாலகவி வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் வயிநாகரம் நாகப்ப ஐயாவின் வாழ்க்கையை 'வயிநாகரம் நாகப்ப ஐயா வரலாறு' என்ற தலைப்பில் எழுதி நூலாக வெளியிட முயற்சி மேற்கொண்டுள்ளார்கள்.

ஃ வயிநாகரம் குடும்பத்தாரின் பூர்வீகம் சேந்தணி கிராமம் ஆகும். அக்குடும்பத்தார் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்தவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வி நிலையத்தை மதுரையில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். அருகில் பாரத ஸ்டேட் வங்கி அதிகாரி ஏ. ஆர். மணி இருக்கிறார்.

Koviloor Digital Library

வாழ்த்துகிறோம்

கண்டரமாணிக்கத்தைச் சேர்ந்த திரு பெ. நா நாச்சியப்பன், 32 வயது இளைஞர். மாத்தூர்க் கோயிலில் கருப்பூர் பிரிவைச் சேர்ந்தவர். திருமணம் ஆனவர். இவர் கோவை தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பயின்று B. Sc.,(Agri) பட்டம் பெற்றவர். பின்னர் வங்கித் தொழிலுக்கு வேண்டிய C. A. I. I. B. மற்றும் D. B. M. B. G. L, ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

மதுரையில் உள்ள கனரா வங்கியில் வேளாண்மை அதிகாரியாகப் பணியாற்றி வரும் இவரை, அமெரிக்க நாட்டில்

M. S. (Agriculture) என்ற மேற் கல்வி கற்பதற்காக அகில உலகச் சுழற்குழு (Rotary International) தேர்வு செய்திருக்கிறது. அமெரிக்க நாட்டில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தில் M. S. (Agri) பயில்வதற்காக 1985–86 ஆம் ஆண்டுக்கு அகில உலக அளவில் 50 பேர் தேர்வு செய்யப் பெற்றுள்ளனர் அந்த 50 பேரில் இவரும் ஒருவர். கல்வி கற்கும் மூன்றாண்டுகளுக்கு ஏற்படும் அனைத்துச் செலவுகளையும். அமெரிக்க நாட்டிற்குச் சென்று திரும்பும் செலவுகளையும் அகில உலகச் சுழற் குழு ஏற்றுக் கொள்கிறது.

திரு. நாச்சியப்பன் மதுரை ஜேசீஸில் இணைச் செயலாளராக இருந்தவர். 1976-77-ல் கோவை ரோட்ராக்ட்டின் தலைவராக இருந்து சேவை செய்தவர், விளையாட்டு, படம் வரைதல் ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர்.

ஆகஸ்ட் '86–ல் மேற் படிப்பிற்காக அமெரிக்க நாடு செல்லும் திரு நாச்சியப்பன் தன் நோக்கத்தில் வெற்றி பெற வாழ்த்துவோம்.

—''எல்லெஸ்''

பிள்ளையார்பட்டி சிவாகம வித்யாசாலைக்குப் புதிய நிர்வாக அறங்காவலர்கள்!

பிள்ளையார் பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சிவாகம வித்யாசாலையின் நிர்வாக அறங்காவலர்களாக (Managing Trustee) காரைக்குடி ப. சு. ராம. அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் ஆ. முத்துப்பட்டணம் என். தண்ணீர்மலைச் செட்டியார் அவர்களும் 11-5-86 அன்று ஏக மனதாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

இந்த சிவாகம வித்யாசாலை தமிழ் நாட்டிலேயே சிவாகமங்களைக் குழந்தைகளுக்குப் போதிப்பதில் சிறந்த வித்யாசாலையாகும்.

திருமணம்

நெற்குப்பை இராம விசுவநாதன் அவர்களின் புதல்வி செல்வி கல்யாணி என்ற பானுமதி B Sc ,க்கும் மேலைச்சிவபுரி அ. சுப அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் நாகப்பன் D M E க்கும் நெற்குப்பையில் 13–4–86 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

Koviloor Digital Library

மணி விழாத் தம்பதியர் வாழ்க பல்லாண்டு!

மதுரை நாகப்பா சைக்கிள் மார்ட் மற்றும் அதன் சகோதர நிறுவனங்களின் பங்குதாரர் கோனுபட்டு ஆர்எம். முத்தழகப்ப செட்டியார் அவர்களுக்கும் அவர்களது துணைவியார் திருமதி மீனுட்சி ஆச்சி அவர்களுக்கும் கோனுபட்டில வருகிற 12-6-86 வியாழக்கிழமை அன்று அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா நடைபெற உள்ளது என்ற செய்தி கற்கண்டாய் இனிக்கிறது.

சுவீகாரம்

முத்தழகப்ப செட்டியார் அவர்கள் கண்டனூர் மு. சித.மு. வெ. வெங்கடாசலம் செட்டியார் தெய்வானை ஆச்சி ஆகியோரின் நான்காவது மகனுகப் பிறந்தவர்கள் இவர்கள் 1949-ஆம் ஆண்டு ஜூன் மாதம் கோனுபட்டுஅற நெறிச் செல்வர் மெ. மு. மு. இராமஞ் செட்டியார் அவர்களுக்கும் விசாலாட்சி ஆச்சி அவர்களுக்கும் அருந்தவ மைந்தராக சுவீகாரம் வந்தார்கள்.

கல்வியும் பணியும்

முத்தழகப்ப செட்டியார் அவர்கள் கண்டனூரில் தம் பள்ளிப் படிப்பை நிறைவு செய்து மலேசியா சென்று அங்கு தன வணிகர் கடையில் பணியாற்றினுர்கள். 1947-ல் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் தலைமையிலான இந்தியத் தேசியப் படையில் (I N A,) சேர்ந்து படைப் பயிற்சி முகாமிலும் 13 வீரர்கள் கொண்ட படைத் தலைவராகவும் இருந்து சேவை செய்தார்கள். பின்னர் 1948–ல் இரங்கூனில் ஒரு உணவகத்தில் சிலகாலம் மேலாளராகப் பணியாற்றினுர்கள் பின்னர் தாயகம் திரும்பி திருச்சியில் மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதி வெற்றி பெற்ருர்கள்.

தொழிலில் ஆர்வம்

தொழில் ஆர்வம் காரணமாக இவர்கள் மதுரையில் தன் நண்பர் ஒருவருடன் உணவகம் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள்



மணி விழாத் தம்பதியர்

ஆர்எம். முத்தழகப்ப செட்டியார்—மீனுட்சி ஆச்சி

Koviloor Digital Library

இந்தச் சந்தர்ப்பத்தில் சிறுகூடல் பட்டி மணிச் செட்டியார் அவர்களின் நட்பும் இறையருளும் கூடிவர அவர்களுடன் இணைந்து நாகப்பா சைக்கிள் மார்ட்டைத் தொடங்கினார்கள். அது இன்று ஆல் போல் வளர்ந்து பல்கிப் பெருகி பல கிளை, துணை நிறுவனங்களை ஏற்படுத்தி உள்ளது.

குண நலன்கள்

முத்தழகப்ப செட்டியார் அவர்கள் அன்புள்ளம் கொண்டவர்கள். எதையும் ஆர்வமுடன் செய்யக் கூடியவர்கள். தொழில் ஆற்றலும் திறமையும் மிக்கவர்கள். இன்சொல் பேசக் கூடியவர்கள். பிறருக்கு மனமுவந்து உதவி செய்யும் பண்பாளர்.

தொண்டு

இலுப்பைக்குடிக் கோயிலைச் சேர்ந்த இவர்கள், அருள்மிகு சௌந்தரநாயகி அம்மன் உடனுகிய தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் திருக்குட நன்னீராட்டு விழாக் குழுவின் பொருளாளராக இருந்து அவ்விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறத் தொண்டாற்றினார்கள்.

மதுரை அரிமா சங்கத்தின் உறுப்பினராகவும் "நகரத்தார் குரல்" சமூக, இலக்கிய இதழின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் உள்ள இவர்கள் நல்லசிந்தனையாளர். இறைப் பணியிலும் திருப்பணிகளிலும் ஆர்வம்மிக்கவர்கள். கோனுபட்டு நாட்டுக் கோட்டை நகரத்தார் சமய அறக் கட்டளையின் தலைவராக உள்ள இவர்கள் நல்ல அறப்பணிகளைச் செய்து வருகிறார்கள்.

குடும்பம்

முத்தழகப்ப செட்டியார் அவர்களது துணைவியார் திருமதி மீனாட்சி ஆச்சி அவர்கள் கோனுபட்டு திரு ராம, வயி. வயிரவன் செட்டியார் — திருமதி ஜானகி ஆச்சியின் புதல்வியாவார்கள். இவர்கள் இல்லறத்திற்கேற்ற நல்லறப் பண்புகள் அமையப் பெற்றவர்கள்.

மனமொத்த இத் தம்பதியருக்கு திரு. நாகப்பன், திரு. இராமசாமி என்ற இரண்டு ஆண் மக்களும் திருமதி முத்தாத்தாள் நாச்சியப்பன், திருமதி மீனாள் அழகப்பன் என்ற இரண்டு பெண் மக்களும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

இத் தம்பதியரின் 59-ஆவது ஆண்டு நிறைவு விழா திருக்கடையூர் அருள்மிகு அபிராமி அம்மன் உடனுகிய அமிர்த கடேசுவரர் ஆலயத்தில் சென்ற ஆண்டு சிறப்பாக நடைபெற்றது.

11-6-86 புதன் நிகழ்ச்சிகள்

இம் மணி விழாவையொட்டி 11-6-86 புதன் கிழமை காலை 6 மணிக்கு கோனுபட்டு வி. பி. தேசபந்து குழுவினரின் நாதஸ்வர இன்னிசையும், 7-00 மணிக்கு கணபதி ஓமமும் மாலை 4-00 மணிக்கு முத்துப்பேட்டை பி. ஏ. சண்முக சுந்தரம் குழுவினரின் நாதஸ்வர இன்னிசையும் 5-00 மணிக்கு தஞ்சாவூர் எஃப். ஆல்பர்ட்சன். எஃப்.ஏ ஜார்ஜ் ரோஸ் குழுவினரின் கிளாரினெட் இன்னிசையும் இரவு 9 மணிக்கு மதுரை சுந்தர்ராஜேகன் குழுவினரின் மெல்லிசையும் நடைபெறுகிறது

12-6-86 வியாழன் நிகழ்ச்சிகள்

காலை 5-45 மணிக்கு அந்தணர் வேதம்; 7-45 மணிக்கு தேவார இன்னிசை; 9-00 மணி முதல் 10-00 மணி வரை கலச அபிஷேகம்; 10-00 மணி முதல் 10-25 மணி வரை திருப்பூட்டுதல்; 10-30 மணிமுதல் 11-30 வரை வாழ்த்தரங்கம். இதில் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் (தக்கார் அருள்மிகு மீனாட்சி

Koviloor Digital Library

சுந்தரேசுவரர் திருக்கோயில்) தலைமையில் திருவாளர்கள் எல். நாராயணன் செட்டியார் ஒக்கூர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார், 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் டாக்டர் சுப. அண்ணுமலை, டாக்டர் தமிழண்ணல், டாக்டர் அர. சிங்கார வடிவேலன், பொற்கிழிக் கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம், செ. செல்லப்பன் ஆகியோர் வாழ்த்திப் பேசுகிருர்கள். மாலை 5-00 மணிக்கு 'மீனுட்சி கல்யாணம்' பற்றி டாக்டர் சரசுவதி இராமநாதன் அவர்கள் விரிவுரை செய்கிருர். இரவு 9 மணிக்கு 'இசைமணி' சீர்காழி எஸ். கோவிந்தராஜன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி; இரவு 12மணிக்கு அன்னியூர் ஏ. பி. சண்முகம் & சந்திரா குழுவினரின் கரகம், காவடி நிகழ்ச்சிகள். இரவு 12-30 மணிக்குப் பஞ்ச முர்த்திகள் திருவுலா.

மணிவிழாத் தம்பதியர் பல்லாண்டுகள் பல நூருண்டுகள் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகிருேம்.

—''எல்லெஸ்''

செட்டிநாட்டு அரச குடும்பத்தினரால் தமிழ் இசை வளர்ச்சியடைந்துள்ளது

மத்திய ராஜாங்க அமைச்சர் அருணுசலம் பாராட்டு!

மதுரை, தமிழ் இசைச் சங்கத்தின் 11-ஆவது ஆண்டு விழா ராஜா முத்தையா மன்றத்தில் 18-5-86 ஞாயிறு மாலை தொடங்கியது.

அண்ணுமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் திருவிளக்கினை ஏற்றி வைத்தார்கள். திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்க மத்தியத் தொழில்துறை ராஜாங்க அமைச்சர் மாண்புமிகு எம். அருணுசலம் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார்கள்.

'இசைமணி' டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் இறை வணக்கம் பாடினுர். தமிழ் இசைச் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவரான செம்பனூர் திரு கும. நா. சுப, நா. மாணிக்கம் செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

மாலைகள் அணிவிப்பு

மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு அருணுசலம் அவர்களுக்கு டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களும் திருமதி சௌந்தராகைலாசம் அவர்களுக்கு குமார ராணி திருமதி மீனு முத்தையா அவர்களும் பொன்னுடை போர்த்தி மாலை அணிவித்தார்கள்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலுக்கு கருங்குளம் ஆர்எம். ரெங்கநாதன் செட்டியார் அவர்களும் டாக்டர் எம் ஏ. எம். இராமசாமி அவர்களுக்கு ஒக்கூர் சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்களும் சீர்காழி திரு எஸ். கோவிந்தராஜனுக்கு செயலாளர் செம்பனூர் திரு நா. மாணிக்கம் செட்டியாரும் சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு உ சுப்பிரமணியத்திற்கு

Koviloor Digital Library

திரு எஸ். எல். என். சர்த்தப்ப செட்டியாரும் மலர் மாலைகள் அணிவித்தனர்.

படத் திறப்பு

அமைச்சர் மாண்புமிகு எம் அருணுபலம் அவர்கள் டாக்டர் ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்களின் திருவுருவப் படத்தையும் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்தனர்.

டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி

டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் பேசியபோது மக்களின் நல்ல உள்ளத்தாலும் நன்கொடைகளாலும் தனது பாட்டனுர். தந்தையாரின் ஆசைகள் சிறப்பாக நிறைவேறி வருகின்றன என்றும் ராஜா முத்தையா மன்றத்திற்கு இதுவரை 75 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளதென்றும் இன்னும் 25 லட்சம் ரூபாய் வரை செலவாகலாம் என்றும் முழுவதும் கட்டிமுடிக்க இன்னும் ஓராண்டு ஆகுமென்றும் தனது தந்தையார் தமிழுக்காக எதையும் செய்யக் கூடியவர்கள் என்றும் தமிழ்வெறி பிடித்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

அமைச்சர் அருணுசலம்

மத்தியத் தொழில் துறை ராஜாங்க அமைச்சர் மாண்புமிகு எம். அருணுசலம் அவர்கள் பேசியபோது செட்டிநாட்டு அரச குடும்பத்தினர் கடந்த மூன்று தலைமுறைகளாக எடுத்த முயற்சியால் தமிழ் இசை வளர்ச்சியடைந்துள்ளது என்றும் 1941-ல் தமிழ் இசை நூல்கள் எழுத ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் நன்கொடை வழங்கியிருக்கிருர்கள் என்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் தோற்றுவித்துள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகம் சிறப்பாக இயங்கி வருகிறதென்றும் செட்டி நாட்டு அரச குடும்பத்தினரின் சேவை வருங்கால இலக்கியங்களில் இடம் பெறும் என்றும் குறிப்பிட்டார்கள்.

சௌந்தரா கைலாசம்

திருமதி சௌந்தரா கைலாசம் பேசுகையில் தமிழ் இசையை பரப்ப செட்டிநாட்டு அரச குடும்பத்தினர் அரும்பாடு பட்டு வந்துள்ளனர் என்றும் மனிதன் பஞ்ச பூதங்களால் ஆனவன் என்றும் கல்லில் ஒளி. ஒலி, காற்று. நீர், மண் ஆகிய அனைத்தும் இருப்பதாலேயே நம் முன்னேர்கள் கல்லில் விக்ரகங்களைப் படைத்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

மலர் வெளியீடு

தமிழ் இசைச் சங்கத்தின் ஆண்டுவிழா மலரை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வரதராஜுலு வெளியிட அதைத் தமிழகச் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. உ. சுப்பிரமணியம் பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவில் சிறந்த தேவார ஆசிரியருக்கும் சிறந்த தேவார மாணவருக்கும் பரிசுகள் வழங்கப் பெற்றன.

செயலாளர் திரு நா. மாணிக்கம் செட்டியார் நன்றி கூற விழா நிறைவு பெற்றது.

சதாபிஷேகம்

ஆ. தெக்கூர் அ. பழ. நடராஜன் செட்டியார் அவர்களுக்கும் திருமதி ந. கல்யாணி ஆச்சி அவர்களுக்கும் ஆ. தெக்கூரில் 21-5-86 அன்று சதாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

Koviloor Digital Library

பேராசிரியர் வீர. முத்துவீரப்பன்

பேராசிரியர் திரு. வீர. முத்து வீரப்பன் பலவான்குடியில் பிறந்தவர். இரணிக் கோயிலைச் சேர்ந்தவர். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் தடுப்பாற்றலியல் துறைத் தலைவராக உள்ள பேராசிரியர் டாக்டர் வீர. முத்துக் கருப்பன் இவரது இளைய சகோதரராவார்.

கல்வி

இவர் 1949-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் B. E (Hons.) பயின்று முதல் மாணவராகப் பட்டம் பெற்றார். 1959ல் இந்திய அரசின் நிதியுதவி பெற்று அமெரிக்கா சென்று கார்னல் பல்கலைக் கழகத்தில் M. S. (வெப்ப ஆற்றலியல்) பயின்று 1961ல் பட்டம் பெற்றார்.

கல்விப்பணி

1952-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகத் தம் கல்விப் பணியைத் தொடங்கிய இவர் 1978 முதல் அங்கு இயந்திரப் பொறியியல் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கல்விக் குழுவில் (Academic Council) 1957 லிருந்தும், தமிழக ஆளுநரின் நியமனம் மூலம் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகக் கல்விக் குழுவில் 1983லிருந்தும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆளவையில் (Senate) 1969 லிருந்தும் அங்கம் வகிக்கிறார்.

பிற பொறுப்புக்கள்

இந்திய சூரிய ஆற்றல் சங்கத்தில் அதன் துவக்கத்திலிருந்து உறுப்பினராகவும் 1977 முதல் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் இருக்கிறார். அனைத்து நாடுகள் சூரிய ஆற்றல் சங்கத்தில் 1978 ஆம் ஆண்டிலிருந்தும் அமெரிக்க இயந்திரப் பொறியாளர் சங்கத்தில் 17 ஆண்டுகளும் அங்கம் வகித்துள்ளார்.

ஆய்வுப் பணிகள்

மத்திய அரசின் உணவுத் துறை, விஞ்ஞானத் தொழில் நுட்பத் துறை, மாற்று எரிபொருள் துறை இவற்றின் நிதி உதவியுடன் ரூ. 33 இலட்சம் மதிப்பில் 5 க்கும் மேற்பட்ட ஆய்வுகளைச் செவ்வனே நடத்தி முடித்திருக்கிறார்.

கருத்தரங்குகள்

மத்திய, மாநில மற்றும்

அனைத்து நாடுகள் அளவிலான சுமார் 50க்கும் மேற்பட்ட பல்வேறு கருத்தரங்குகளில் பங்கேற்று 60க்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகளை இவர் வாசித்திருக்கிறார் இவரது முயற்சியால் 1980–ஆம் ஆண்டு 'இந்திய சூரிய ஆற்றல் மாநாடு' அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வெளிநாட்டுப் பயணம்

இவர் அமெரிக்காவிற்கு இரு முறைகளும் இத்தாலி, இங்கிலாந்து, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகட்கு கருத்த

Koviloor Digital Library

நகரத்தார்கள் தற்போது வசிக்காத ஊர்கள்!

ஒன்பது நகரக் கோயில்கள் உள்ள ஊர்களில் வசித்த நகரத்தார்கள் நாளாவட்டத்தில் வெவ்வேறு ஊர்களில் சென்று வசிக்கலாயினர். அப்படிக் குடியேறிய ஊர்கள் தொண்ணூற்ருறு ஆகும். எனவே 'தொண்ணூற்ருரூர் நகரத்தார்' எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றனர்.

அந்தத் தொண்ணூற்ருரூரில் வாரிவயல், பொய்யரூர், சிவரக்கோட்டை, ஆலங்குடி மேலமாகாணம், கூத்தரூர், ஆர்க்காடு, வித்ரா வயல், சித்தாட்டி வயல், நெய்வாசல், இளையாத்தங்குடி, வயிரவம்பட்டி, நேமம், இரணியூர், குறட்டி, தட்டட்டி, கம்பனூர், இலுப்பைக்குடி, மாத்தூர், கீரணிப்பட்டி, சேர்ந்தணி, எழுவன்கோடடை, கீழக்கோட்டை ஆகிய ஊர்களில் தற்பொழுது நகரத்தார்கள் வசிக்கவில்லை.

(கம்பன் அடிப்பொடி சா. கணேசன் எழுதிய 'நகரத்தார் வரலாறு' என்ற கட்டுரையிலிருந்து)

—''எல்லெஸ்''

ரங்குகளில் பங்கேற்கவும் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடவும் சென்று வந்திருக்கிருர்.

சிறப்பு

இந்திய அரசின் பல்கலைக் கழக மானியக் குழு (University Grants Commission) அண்மையில் இவரை பொறியியற் கல்வி மற்றும் ஆய்வுக்கான ஆலோசனைக் குழுவில் (Panel for Engineering Education and Research) பணியாற்றப் பணித்திருக்கிறது. இவ்வாறு நாட்டின் பல் வேறு பகுதிகளினின்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள பதின் மூவரில் நம்மவரும் ஒருவர் என்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியது.

அண்மையில் அறுபதாண்டு நிறைவு மணி விழாக் கண்ட பேராசிரியர் திரு. முத்துவீரப்பனது வாழ்க்கை நம் மினத்து இளைஞர்கட்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

பேட்டி: அரு. இராமநாதன்

மணமகன் தேவை

இலுப்பைக்குடிக் கோயிலைச் சேர்ந்த S.S.L.C வரை படித்து சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் டைப்பிஸ்டாக இருந்து மாதம் ரூ. 700/- சம்பளம் பெறும் 27 வயதுப் பெண்ணுக்கு நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை. விருப்பமுள்ளவர்கள் கோயில், குடும்பம் மற்றும் வேலை விவரம் ஆகியவற்றுடன் கீழ்க் கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும் :-

KR. Somasundaram

C/o. Somu Illam, AP. 1716 14 th Sector,
103 rd Street K K. Nagar, MADRAS-600 078

Koviloor Digital Library

தமிழ் நாட்டில் பல்கலைக் கழகங்கள்

இந்தியாவில் 125 பல்கலைக் கழகங்கள் உள்ளன அவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் 9 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றின் முகவரிகள்:—

1 சென்னைப் பல்கலைக் கழகம்
பல்கலைக் கழகக் கட்டிடம்
சென்னை-600 005
(துவக்கம்-1857)

2 அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்-608 002
தென்னாற்காடு மாவட்டம்
(துவக்கம்-1929)

3 மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்
பல்கலை நகர்
மதுரை-625 021
(துவக்கம்-1966)

4 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோயமுத்தூர்-641 003
(துவக்கம்-1971)

5 காந்திக்கிராமப் பல்கலைக்கழகம்
காந்திக்கிராமம்-624 302
மதுரை மாவட்டம்
(துவக்கம்-1976)

6 அண்ணா பல்கலைக் கழகம்
சர்தார் பட்டேல் ரோடு
கிண்டி
சென்னை-600 025
(துவக்கம்-1978)

7 தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்–613 001
(துவக்கம்-1981)

8 பாரதியார் பல்கலைக் கழகம்
மருதமலை ரோடு
கோயமுத்தூர்–641 046
(துவக்கம்-1982)

9 பாரதிதாசன் பல்கலைக் கழகம்
4, பாரதிதாசன் ரோடு
திருச்சிராப்பள்ளி-620 001
(துவக்கம்–1982)

நம்மவரில் மூன்று ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்!

கீழச்சிவல்பட்டி அரு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்களின் புதல்வரும் வயிரவன் கோயிலைச் சேர்ந்தவருமான திரு. அரு. சுகுமார், I. A. S. (Indian Administrative Service) தேர்வில் வெற்றி பெற்று, பயிற்சி முடிந்து இப்போது ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தில் சப்-கலெக்டராகப் பதவியேற்றுள்ளார். இவர், நம்மவரில் I. A. S. அலுவலராகும் மூன்றாவது அன்பர் ஆவார்.

ஏற்கனவே ஏவி. மெய்யப்ப செட்டியார் அவர்களின் மாப்பிள்ளையும் கானாடுகாத்தானைச் சேர்ந்தவருமான அ. வள்ளியப்பன் அவர்களும், 'பொற்கிழிக் கவிஞர்' சொ. சொ. மீ. சுந்தரம் அவர்களின் இளைய சகோதரர் சொ. சொ. மீனாட்சிசுந்தரம் அவர்களும் (தேவகோட்டை – வயிரவன் கோயில்) முறையே ஆந்திர மாநிலத்திலும், கர்நாடக மாநிலத்திலும் உயர் பதவிகளில் இருந்து வருகிறார்கள்.

Koviloor Digital Library

சிவாலய வழிபாட்டு முறை: ஒரு கடிதம்!

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்,

"நகரத்தார் குரல்" மே'86 இதழில் பக்கம் 28ல் சிவாலய வழிபாட்டுமுறை பற்றிய கட்டுரை வெளிவந்துள்ளது. அதில் அம்மன் சன்னதி தனியாக உள்ள கோயிலில் இரண்டு அல்லது நான்கு பிரகாரங்கள் வரவேண்டுமென்றும். சாஷ்டாங்க நமஸ்காரம் என்பது இரு கால்கள், இரு கைகள், இரு காதுகள், மூக்கு தலை முதலியவை தரையில் படும்படி நமஸ்கரித்தல் என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

அம்மன் சன்னதி தனியாக உள்ள கோயிலில் இரண்டு பிரகாரம் வருவது குற்றம். நான்கு முதல் இரட்டைப்படையான எண்ணிக்கைகளில் பிரகாரம்-நமஸ்காரம் செய்தல் வேண்டும். சாஷ்டாங்க நமஸ்காரம் என்பது தலை, கையிரண்டு, காதுகளிரண்டு, புயங்களிரண்டு, மோவாய் என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திற் பொருந்த வணங்குவது ஆகும்.

இந்தத் திருத்தம், சைவ சித்தாந்தப் பேரறிஞராக விளங்கும் என் தாய்வழிப் பாட்டனார் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் எழுதியுள்ள 'சிவாலய தரிசன முறை' என்னும் நூலில் உள்ளபடி எழுதியனுப்பி வைக்கப் பெற்றுள்ளது.

அழகு. சிற்சபேசன்
தேவகோட்டை

சின்னச் சின்னச் செய்திகள்

- நுழைவு வரி இல்லாத நாடு சிங்கப்பூர்.
- உலகத்திலேயே மிகப் பெரிய பாலம் சான்பிரான்ஸிஸ்கோவிலுள்ள எட்டு மைல்கள் நீளமுள்ள ஒக்லாந்து பாலமாகும்.
- நம் உடலிலே உள்ள மிகச் சிறிய எலும்பு நடுக் காதில் உள்ள 'ஸ்டேப்ஸ்' என்ற எலும்பாகும். 3 மீட்டர் நீளமுள்ளது இது.
- மிகப் பெரிய சிகரமான எவரெஸ்டின் உயரம் 29,028 அடிகள். (8850 மீட்டர்கள்)
- ஒலிம்பிக் கொடியில் உள்ள ஐந்து வளையங்களில் சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை, கறுப்பு ஆகிய நிறங்கள் உள்ளன. நிறங்கள் தேர்வு செய்யப்பட்டதன் காரணம், இவற்றில் ஏதாவது ஒன்று எல்லா நாட்டுக் கொடிகளிலும் இடம் பெற்றிருப்பது தான்.

—க. இராமநாதன் (B.Sc.)
சொக்கநாதபுரம்

செட்டிநாட்டுப் பெருமக்களே! சான்றோர்களே!

சான்றிதழ்கள், பத்திரங்கள், எழுதப்பட்டவைகள், அச்சடிக்கப்பட்டவைகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில்சிறந்த முறையில் போட்டோ ஸ்டெட் நகல் எடுத்துத் தரப்படும். புளு பிரிண்ட் நகலும் எடுத்துத் தரப்படும்.

ஸ்ரீ சித்தி விநாயகா ஜெராக்ஸ்

நற்சாந்துபட்டி - 622 404

திருமயம் தாலுகா

Koviloor Digital Library

எவர்பிரைட் நாச்சியப்பர்

அரசியலுக்கும் இலக்கியத்திற்கும் பெயர் பெற்ற பாகனேரியைச் சேர்ந்தவர் இந்த நாச்சியப்பர். 68 வயது இளைஞர். வயிரவன் கோயிலைச் சேர்ந்தவர். முத்துச் சொக்கலிங்கமாக இருந்த இவர் உள்ளூரிலேயே பிள்ளை வளரச் சென்று அங்கு நாச்சியப்பர் ஆனார்.

9 வயது முதல் 29 வயது வரை மலேயாவில் வாழ்ந்த இவர் இடையிடையே தாயகம் வந்து திரும்பினார். பாகனேரியில் ஒரு சமயம் இருந்த விவேகானந்தா சாரணர் படையின் தலைவராக இருந்து முதன் முதலாகச் சமூகத் தொண்டாற்றினார்.

இளம் வயதில் உடற்பயிற்சி, குத்துச் சண்டை, கால்பந்து போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். சைவப்பற்று, தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்றுக் கொண்டவர் சிங்கப்பூரில் பிரபல இசை அறிஞர் ஒருவரிடம் முறையாக மூன்றாண்டுக் காலம் இசைப் பயிற்சி பெற்று சில அரங்குகளிலும் வானொலியிலும் பாடித் தமக்குள்ள இசைப்பற்றை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இவர் பள்ளியில் கல்வி கற்றது ஓரளவே. எனினும் தமிழறிஞர்கள் சான்றோர்களது நல்ல நல்ல நூல்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொண்டு அதன் மூலம் தன்னிச்சையாகப் பேசவும் எழுதவும் வல்லவராகத் திகழ்கிறார்.

மலாய் நாட்டுத் தமிழ் நாளேடுகளில் இவர் கவிதை, கட்டுரைகள் எழுதியிருப்பதோடு கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் "தமிழ்நேசன்" நாளிதழில் ஆசிரியர் துறையிலும் சில காலம் பணியாற்றியிருக்கிறார்.

ஜப்பானியரின் இராணுவ ஆட்சிக் காலத்தில் இவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸால் நிறுவப் பெற்றிருந்த இந்திய தேசியப் படையின் பிரசாரப் பகுதியில் இடம் பெற்று அதன் மூலம் தாயக விடுதலைப் போரில் பங்கு பெற்றார்.

இவர் மதுரையில் 'எவர் பிரைட் எம்போரியம்' என்னும் பெயரில் 1948ல் முதன் முதலாக எவர்சில்வர் வணிகத்தைத் தொடங்கி அதன் மூலம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றதால் இவரை 'எவர்பிரைட் நாச்சியப்பர்' என்று அழைக்கலானார்கள்.

மதுரை தமிழரசுக் கழகத்தின் அப்போதைய தலைவரான திரு.

நாச்சியப்பர் 'சிலம்புச் செல்வர்' ம. பொ. சிவஞானம் அவர்களின் பேரன்பைப் பெற்றவர். தமிழரசுக் கழகம் 1964ல் நடத்திய தமிழ் போதனா மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு அப்போதைய தமிழக முதல்வர் எம். பக்தவத்சலம் அவர்களுக்கு மதுரையில் கறுப்புக் கொடி காட்ட இருந்த நேரத்தில் போலீஸாரால் கைது செய்யப்பட்டு சில நாட்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

மதுரையில் பிரபல மருத்துவராக இருக்கும் டாக்டர் என்.என். கண்ணப்பன் இவரது திருக்குமாரராவார்.

— எஸ். சுந்தரம்

Koviloor Digital Library

திருமணம்

கோட்டையூர் டாக்டர் ஏஎல். அண்ணுமலை அவர்களது புதல்வன் செல்வன் அழகப்பன் என்ற ராஜா B. A., B. Com. (Hons)க்கும் விஸ்வநாதபுரம் பி. கு. நா. கும. பி. நாகப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி அன்னபூரணி B. Sc. க்கும் விஸ்வநாதபுரத்தில் 12—5—86 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ

அரண்மனை சிறுவயல் சித. சுப. சபாபதி செட்டியார் (General Manager, Bank of Madura Ltd) அவர்களின் புதல்வி செல்வி மீனுட்சி B, Com, க்கும் காரைக்குடி மு. கரு. அ. பஞ்சநாதன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சோமசுந்தரம் D, E, E,க்கும் 28—5—86 அன்று அரண்மனை சிறுவயலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது,

புதுமை

பாகனேரி கா. சுப. சு. கதி. கா. சோமசுந்தரத்தின் புதல்வன் செல்வன் காளையப்பன் என்ற அருணுசலத்திற்கும் புதல்வி செல்வி மீனுட்சி என்ற பிரியாவுக்கும் 29—5—86 அன்று பாகனேரியில் காப்புக் கட்டுப் புதுமை சிறப்பாக நடைபெற்றது.

மேலைச்சிவபுரி ஊராட்சி மன்றத் தலைவர்

அண்மையில் நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தலில் மேலைச்சிவபுரி ஊராட்சி மன்றத் தலைவராக அ. சொ. அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் போட்டியின்றி ஏக மனதாகத் தேர்வு செய்யப்பட்டுச் சேவை செய்து வருகிருர்கள்.

ஒழுக்கத்தைச் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே பயிற்றுவிக்க வேண்டும். சிறு பருவத்தில் ஒழுக்கம் கெட்டு நடந்தால், திருந்துவது கடுமை.

''உலக அநுபவங்கள்''
என்ற நூலிலிருந்து

வேகுப்பட்டியில் பட்டி மன்றம்

வேகுப்பட்டி ஏனமாரியம்மன் கோயில் குடநீராட்டு விழாவை முன்னிட்டு, 22-5-86 வியாழன் இரவு 10 30க்கு 'மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கதாபாத்திரம் இராமனு? கண்ணனு?' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. வேந்தன்பட்டி கவிஞர் ஒமரப்பன் அனைவரையும் வரவேற்ருர். எழிலரசன் அறிமுகம் செய்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு பேராசிரியர் பா. நமசிவாயம் நடுவர் பொறுப்பேற்றிருந்தார். 'இராமனே' எனும் அணியில் புலவர்மாமணி மா. முத்துராமன், சோம. சிவப்பிரகாசம், புனிதா ஏகாம்பரம் ஆகியோரும். 'கண்ணனே' எனும் அணியில் பேராசிரியர் சுப. கதிரேசன், அரு. சுந்தரம், சி. எஸ். விசாலாட்சி ஆகியோரும் பேசினுர்கள். கடைப்பிடிக்க வேண்டிய பாத்திரம் ''இராமனே'' என்று நடுவர் தீர்ப்பு வழங்கினுர். அண. இராமநாதன் நன்றி கூறினுர்.

சோம. இளவரசு இயற்கை எய்தினுர்

கவிஞர் சோம, சிவப்பிரகாசம் அவர்களது தமையனுர் சோம. இளவரசு அவர்கள் உடல் நலம் குன்றி 31—5—86 சனி இரவு 9 மணி அளவில் கீழச்சிவல்பட்டியில் இயற்கை ஏய்தினுர்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

Koviloor Digital Library

கொழு கொழு குழந்தை !

பெயர் : பழ. வைரவன்
வயது : 2 ஆண்டுகள்
தந்தையின் பெயர் : மு. பழநியப்பன்
தாயின் பெயர் : பழ மீனாட்சி
சொந்த ஊர் : குளிபிறை
படம் : அழகப்பா ஸ்டுடியோ காரைக்குடி

பெயர் : அண்ணாமலை என்ற இராஜாராம்
வயது : ஒன்றரை
தந்தையின் பெயர் : அ. இராமநாதன்
தாயின் பெயர் : ராம, ஆழகு மல்லிகா
சொந்த ஊர்: வேந்தன்பட்டி
கோயில் : மாற்றூரில் மண்ணூர்

பாடுவார் முத்தப்பர் கோட்டம்

பொறியாளர் நாட்டரசன் கோட்டை திரு. எஸ். கண்ணப்பனைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பாடுவார் முத்தப்பர் கோட்டத்தின் அமெரிக்க நிதி வசூல்க் குழுவின் செயலாளராக நாச்சியாபுரம் டாக்டர் எஸ். லெட்சுமணன் நியமிக்கப்பட்டுள்ளார் (இவர் இல்லினாய்ஸ் மாநிலம் சேலத்தில் மருத்துவராக இருக்கிறார்.)

பாடுவார் முத்தப்பர் கோட்டத்தின் நிதி வேண்டுகோள் அறிக்கையை உருவாக்கி அனைவருக்கும் அனுப்பும் பொறுப்பை அரிமளம் திரு. வி. சுப்பிரமணியம் ஏற்றுள்ளார்.

நடராஜ் அண்ணாமலை அமெரிக்கா பயணம்!

1986 - 87க்கு அரிமா மாவட்டம் 324 - A2 க்கு ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற நடராஜ் அண்ணாமலை அவர்கள் தமது துணைவியார் திருமதி சொர்ணம் ஆச்சி அவர்களுடன் 12—6—86 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு அமெரிக்கா செல்கிறார்கள். இவர்களது சுற்றுப் பயணம் ஆறு வாரங்கள் கொண்டது.

நடராஜ் அண்ணாமலை அவர்கள் பனையப்பட்டி சுப. அ. நடராசன் செட்டியார் அவர்களது புதல்வர். கள்ளக்குறிச்சி ஆற்காடு டெக்ஸ்டைல் மில்ஸின் நிர்வாகி.

Koviloor Digital Library

சிந்தாமணி விநாயகர் ஆலயத் திருப்பணி

தஞ்சாவூர், கீழவாசல் பாம்பாட்டித் தெருவில் அமைந்திருக்கும் அருள்மிகு சிந்தாமணி விநாயகர் ஆலய நிர்வாகம் ஏற்கனவே நம்மவர் வசம் இருந்தது. நம்மவர்கள் கட்டிய நகர விடுதி, வரி ஏலத்தில் போய் விட்டது. இப்போது பொதுமக்களும் நம்மவரும் சேர்ந்து ஒரு குழு ஏற்படுத்தி இவ்வாலயத்திற்குத் திருப்பணி செய்து குட முழுக்கு நடத்த ஏற்பாடு செய்து வருகிறார்கள். 2 இலட்சம் ரூபாய் திட்டத்தில் நடைபெற்று வரும் இத் திருப்பணிக்கு திரு. ஏஎன். சோமசுந்தரம், பொருளாளர், அருள்மிரு சிந்தாமணி விநாயகர் ஆலயத் திருப்பணிக் குழு, பாம்பாட்டித் தெரு, தஞ்சாவூர் என்ற முகவரிக்கு, விரும்புவோர் நன்கொடைகளை அனுப்பி வைக்கலாம்.

திருமணம்

தேவகோட்டை ஏஆர், லெட்சுமணன் (வழக்கறிஞர், சென்னை) அவர்களின் புதல்வி செல்வி சொர்ணவல்லி என்ற கமலாவிற்கும் சண்முகநாதபுரம் ஓ, விஆர், எஸ்வி, எஸ்எம், எஸ், முத்தப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சுவாமிநாதன் என்ற பரலு B. B. A, வுக்கும் 22–5–86 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணமகள்: செல்வி கல்யாணி என்ற உஷா B, Sc., (இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருச்சி) பொன், புதுப்பட்டி திரு. மு. பெ. மு. சே. சுந்தரம் செட்டியார் புதல்வி

மணமகன்: செல்வன் இராமநாதன் B. Com. (T. N. S. C. C. மதுரை) – வேந்தன்பட்டி திரு. மு. முத்து. ராம, மெய்யப்ப செட்டியார் புதல்வன்

இவர்கள் திருமணம் 22—5—66 அன்று பொன், புதுப்பட்டியில் சிறப்பாக நிகழ்ந்தது. வாழ்க மணமக்கள்!

Koviloor Digital Library

எண்ணங்களை எழுதுகின்றேன்

டாக்டர் மெ. மெய்யப்பன் M.Sc., Ph.D.

—5—

நம்மிடையே சிக்கனம் இல்லாததால் விளையும் கொடுமைகளை இன்னும் சொல்லுகின்றேன் கேளீர்.

சில நேரங்களில் சில நண்பர்கள் என்னிடம் வந்து, "நான் ஏன் நகரத்தாராகப் பிறந்தேன்" என்று சொல்லி வருந்தியதுண்டு. அவர்கள் அதற்கான காரணங்களைக் கூறி அழுதபொழுது தக்க ஆறுதல் கூற முடியாது தவித்துப் போனேன். அவர்களுடைய சோகத்தில் சுரந்த நீர் என்னைச் சுட்டபொழுது, வளர்ந்த நாகரீகத்தில் உயரிய நாகரீகத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் நகரத்தார் இளைஞர்களின் இதயத்தில் இப்படியும் எண்ணங்களா என்று எண்ணி எண்ணி விம்மிய இரவுகள் பல. அப்போது வெடித்த வெம்மையான சிந்தனைகளை, இதோ உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

சோகமும் சுகமும் வாழ்க்கையின் இரு பக்கங்கள். அதில் சுகம் என்ற பக்கத்தை குத்தகை எடுத்துக் கொண்டு, சுகத்திற்கு தினமொரு புதிய விளக்கம் தர முனையும் நம்மில் பெரும்பாலானோர்க்கு அவர்களுடைய எண்ணங்களும், அதற்குக் காரணமான அனுபவங்களும் புதிதாக மட்டுமில்லை; கேலியாகக் கூடத் தோன்றலாம், எப்படி இருந்த போதிலும் அதையெல்லாம் உங்கள் முன்னே கொட்டித் தீர்த்துவிடுவது என்று தீர்மானித்து விட்டேன், ஏற்று அணைத்துக் கொள்ளுவதும், எட்டி உதைத்துத் தள்ளுவதும் இனி உங்கள் விருப்பம்.

எவ்வளவு தான் பொருள் ஈட்டினாலும், கல்யாணம் மற்றும் இன்ன பிற விசேடங்களுக்குச் செலவு என்று வரும்போது, நல்மில் பலருக்குக் கையைத்தான் கடிக்கின்றது. பரம்பரைச் சொத்து ஐயாக்களுக்கும், அப்பாக்களுக்கும் பாதுகாப்பு அளித்தது போல இன்றைய இளைஞர்களுக்கு இல்லை. என்றைக்காவது கழுத்தை அலங்கரிக்கப் போகும் நகைகளாகட்டும் இல்லை அறையில் தூங்கப் போகின்ற சாமான்களாகட்டும், எல்லாவற்றையுமே வாங்கும் சம்பளத்திலிருந்துதான் செய்ய வேண்டிய ஒரு பொருளாதாரச் சூழ்நிலை. பாவம் ஒரு பக்கம் மீறிச் செல்ல முடியாத சமூக நெறிமுறைகள்; மற்றொரு பக்கம் மீறிச் செலவழிக்க முடியாத நிர்ப்பந்தம். அகன்று வரும் இவ்விரு எல்லைக் கோடுகளுக்கு இடையே செக்கு மாடுகளாய்ச் சுற்றிச் சுற்றி, இனிச் சுற்றத் தெம்பில்லாமல் செயலிழந்து போய் படுத்துவிட்ட இவர்களின் பரிதாபம், இசைக்கப்பட்டு ஓசைப் படாத ஒரு சோக கீதம்.

ஒவ்வொரு நாளும் பொருளீட்டி ஒரே நாளில் செலவழித்துத் தீர்க்க வேண்டிய கட்டாயம் நம் சமூகத்தில் மட்டும்தான் ஆழமாய் வேரூன்றி நிற்கின்றது. இந்தக் கட்டாயம் கையெழுத்துப் போடப்

Koviloor Digital Library

படாத ஓர் ஒப்பந்தம்தான் என்ருலும், பிறக்கும்போதே பெரியவர்களால் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு ஒன்றும் அறியாப் பருவத்திலேயே ஒப்புக் கொண்டுவிட்ட வேலை. வாக்குச் சுத்தம் பார்த்து சத்தம் போடாமல் இருக்கின்ருேமா இல்லை முதலில் யார் சத்தம் போடப் போகின்ருர்கள் என்று காத்துக் கொண்டிருக்கின்ருேமா? அழுத பிள்ளைதானே பால் குடிக்கும். சத்தம் போடாமலேயே சுத்தம் வேண்டும் என்ருல் எப்படி? நம் வீட்டை நாமே சுத்தம் செய்ய நாம் வெட்கப்பட்டுக் கொண்டிருப்பதில் துளியும் அர்த்தம் இல்லை.

பிறக்கும் போதே ஏற்றப்பட்டுவிட்ட தலைச் சுமையின் பாரம் தாங்காமல் விழுந்தோர் சிலர். விழுக நிற்போர் பலர். அவர்கள் தம் சிக்கனமின்மையை கண்டு அஞ்சி, அதைப்போல நம்மாலும் செலவழிக்க முடியுமா, என்று எண்ணி மனம் நொந்து 'நாம் ஏன் நகரத்தார்களாக வந்து பிறந்தோம்' என்று மனதிற்குள்ளாகவே அழுகின்ருர்கள். அந்த அபயக் குரல் என் காதுகளுக்குக் கேட்கின்றது. உக்கள் காதுகளில் விழவில்லையா?

வாயில் வெள்ளிக் கரண்டியோடு வெளியுலகிற்கு வந்த குழந்தை என்று அதிருட்டக் குழந்தையை ஆங்கிலேயர்கள் வர்ணித்தார்கள். ஐயா, வெள்ளிக் கரண்டி வேண்டாம், செம்புக் கரண்டி கூட வேண்டாம், அதற்காக சுமக்க முடியாத பாரம் தலையில் ஏற்றப்பட்டா நாம் பிறக்க வேண்டும். விரும்பியோ, விரும்பாமலோ நாம் எல்லோரும் நடமாடும் சுமை தாங்கிகளாகிவிட்டோம் இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் இந்த அவல நிலை. ஒருவர் சுமையைப் பார்த்து மற்ருெருவர் அலக்கழிப்பது மனித நாகரீகத்திற்கு அழகல்ல. எண்ணத் தூய்மையும் முதிர்ச்சியும் இல்லாத அநாகரீகம். ஒருவருக் கொருவர் உதவிக் கொண்டால் தலைப்பாரத்தை தரையிலிறக்கி வைத்துவிட்டு நெஞ்சில் நெருடலற்ற இனிய வாழ்க்கையை இனியாவது தொடங்குவதற்கு வாய்ப்புக் கிட்டும். நம்மை அழுத்திப் பிடித்து இப்படி ஆட்டுவிப்பது காலத்திற்கு ஒவ்வாத நமது சமூக நெறிமுறைகளே என்பதை நாம் எல்லோரும் ஒரு சேரப் புரிந்து கொண்டு விட்டால், அதைத் தளர்த்திக் கொள்ள நாமே பிடிவாதமாகத் தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க மாட்டோம்.

நமக்கு நாமே எப்படி உதவிக் கொள்வது? இரு வீட்டாரும் மனம் விரும்பி ஒப்புக்கொண்டு, திருமணம் மற்றும் நடைமுறைச் செலவுகளைப் பெருளவு குறைத்துக் கொள்ளலாமே அப்போதுதான் சம்பளம் வாங்கி காலந்தள்ளும் நம் இளைஞர்கள் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையையும் ஒரு பிடிப்பையும் பெற்று வாழும் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் தேட முனைவார்கள. தங்கு தடையில்லாத சமூக முன்னேற்றம் என்பது அதுவாகத்தானே இருக்கமுடியும். அதை முறையாகச் செய்துதர வேண்டியது நமது சமுதாயத்தின் தலையாய கடமைகளில் ஒன்றில்லையா?

(தொடரும்)

கல்லல் ஒன்றியத் துணைத் தலைவராக வயி. ச. மாணிக்கம்

நாச்சியாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராகப் போட்டியின்றி ஏக மனதாகத் தேர்வு செய்யப் பெற்ற திரு. வயி. ச. மாணிக்கம் B. Com (Hons) 21—4—86 அன்று நடைபெற்ற கல்லல் ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார், அவருக்கு நமது நல்வாழ்த்துக்கள்.

Koviloor Digital Library

வாழ்வாங்கு வாழ்ந்த குலமே!

—கவியரசர் கண்ணதாசன்—

சிந்துவெளிப் புகழ்காத்து
சீர்காத்து திறம்காத்து
தென்னாடு வந்த குலமே

திருவுடைய சோழனவன்
செம்மாண் புகார் நகரில்
திருக்கோவில் கொண்ட குலமே

வந்தவழி மறவாது
வாய்மை நெறி தவறாது
வாழ்வாங்கு வாழ்ந்த குலமே

வாணிபமும் மதநெறியும்
வளர்ந்தோங்கி நாள்தோறும்
வளமாக நின்றகுலமே

எந்தமிழ் நாடெங்கும்
இறைபணியே பெரிதென்று
எந்நாளும் செய்த குலமே

என்னுடைய குலமென்பேன்
எல்லாமும் நீயறிவாய்
ஏற்றுக்கொள் தமிழர் நிலமே

காவிரியின் பெருமாட்டி
கவின்மதுரை நகர்தன்னைக்
கயல்சூழ வைத்த கதையும்

கண்ணகிஎன் றாரல் இந்த
மண்ணெல்லாம் அடிபணிய
கற்போடு வாழ்ந்த நிலையும்

நாவலரசியும் போதெல்லாம்
நாடரசையும் படிநின்ற
நல்வளையா பதியின் கதையும்

நாடியவர்ப் பணியாது
மணிமேகலை என்ற
நன் மங்கை வாழ்ந்த கதையும்

காவியங்கள் ஐந்தினிலும்
மூன்றிலே தலைதூக்கிக்
காட்டுவதும் எங்கள் குலமே

கடுகளவுதான் சொன்னேன்
மலையளவு புகழுண்டு
காண்பாய்நீ தமிழர் நிலமே

கடலோடி மலைநாடும்
பிறநாடும் சென்றார்கள்
கப்பல் வராத போதே

காற்றினிலே பாய்போட்டு
கடவுளையே துணைவைத்து
கலங்களெலாம் சென்றபோதே

நடமாடும் சிவமாக
திருநீறும் சந்தனமும்
நதிபோலப் பூசும் உடலே

'நமசிவாயம்' என்று
நாள்தோறும் சொல்லுமவர்
நயமான சிவந்த இதழே

தடம்பார்த்து நடைபோடும்
தனிப் பண்பு மாறாத
தகைமிக்க தெங்கள் குலமே

தந்தகரம் அவராகப்
பெற்றவளும் நீதானே
சாட்சிசொல் தமிழர் நிலமே

ஆறுயிரம் பேர்கள்
கற்கின்ற கழகத்தை
அண்ணா மலை நாட்டினான்

அவனோடு போட்டியிட
அத்தனையும் தான்தந்து
அழகப்பன் முடிசூட்டி னான்

ஓராயிரம் தடவை
செட்டிமகன் நானென்று
உலகெங்கும் மார்தட்டினான்

உளநூலும் விஞ்ஞான
மருத்துவமும் கற்றவர்கள்
உண்டென்று பேர் காட்டினான்

Koviloor Digital Library

நாள் வாழ்க்கைக்குச் சில சொற்கள்

அயல் மொழிச் சொற்கள்		தமிழ் மொழிச் சொற்கள்
டூத் பேஸ்ட்	—	பற் பசை
டூத் பிரஷ்	—	பற்றூரிகை
ஷேவிங் பிரஷ்	—	மழிப்புத் தூரிகை
பிளேடு	—	மழிப்பான்
சோப் பாக்ஸ்	—	சவர்க்காரப் பேழை
பனியன்	—	உள்ளொட்டி
அண்டர் வேர்	—	உட்காற் சட்டை
ஜட்டி	—	உள்ளுறை
பிரேசியர்	—	உட் கச்சு
காப்பி	—	குளம்பி
டீ	—	தேநீர்
பேனா	—	தூவல்
பென்சில்	—	கரிக் கோல்
அழி ரப்பர்	—	அழிப்பான்
சைக்கிள்	—	மிதிவண்டி
லாரி	—	சுமையுந்து
டாக்சி	—	வாடகையுந்து
ஸ்கூட்டர்	—	மெல்லுந்து
பஸ்	—	பேருந்து
ட்ரெயின்	—	தொடர் வண்டி
கிருதா	—	ஓரக் குடுமி

(காரைக்குடி, காந்தியத் தொண்டர் மன்றம் வெளியிட்டுள்ள 'தமிழா! இன்னுமா உறக்கம்?' என்ற வெளியீட்டிலிருந்து)

சேராத செல்வத்தைச்
சேர்த்தாலும் நல்லவழி
செல்வாகும் எங்கள் குலமே

செந்திருவை சரஸ்வதியை
கேட்டேனும் உண்மைநிலை
தெரிந்துகொள் தமிழர்நிலமே

சாதிவெறி கொண்டேன்போல்
கவிதையிதை எழுதினேன்
தவறல்ல; உண்மை சொன்னேன்

தர்மத்தைப் பாடுவது
சாதிவெறி யாகாது
தமிழுக்கே நன்மை என்பேன்

ஓதியொரு மொழி சொன்ன
ஒக்கூர்மா சாத்தியுமென்
உன்னதப் பாட்டி யாவாள்

உயர்ந்த சீத் தலைச்சாத்தன்
ஒருவகையில் வணிகனென்
உத்தமப் பாட்டனாவான்

ஆதிமுதல் தமிழிலே
அவர்வந்த வழியிலே
அடியேனைப் பெற்ற குலமே

அளவிலே சிறிதேனும்
செயலிலே பெரிதாக
அறிவாய்நீ தமிழர் நிலமே!

(அமரர் கவியரசர் கண்ணதாசனின் மணிவிழா நாளை (24-6-86) ஒட்டி, அவர் இயற்றிய இவ்வற்புதக் கவிதை வெளியிடப் பெறுகிறது)

Koviloor Digital Library

காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா!

நாம் பிறந்த மண்ணான காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா 12-7-86 (அட்சய ஆடி ஆனி மீ 28) சனிக்கிழமை தொடங்கி 23-7-86 (ஆடி மீ 7) புதன்கிழமை வரை நடைபெறவிருக்கிறது.

ஸ்ரீ பட்டினத்தார்

நிகழ்ச்சி விவரம்

12—7—86 சனி இரவு அனுக்ஞை விக்னேசுவர பூஜையும் திருவெண்காடர் திருவவதாரமும் 13—7—86 ஞாயிறு பகலில் தீட்சை பெறல் 14—7—86 திங்கள் காலை திருவெண்காடர் முக்குள ஸ்நானம்; இரவு திருக்கல்யாணம் 15—7—86 செவ்வாய் காலையில் மருதவாணர் குழந்தையாக எழுந்தருளல்; இரவு மருதவாணர் குழந்தையின் எடைக்குப் பொன் நிறுத்துக் கொடுத்தலும் தாலாட்டும். 16—7—86 புதன் மாலையில் கப்பல் யாத்திரையும் துறவறம் மேற்கொள்ளலும் 17—7—86 வியாழன் இரவு அப்பம் அளித்தலும் வீடு தீப்பற்றுதலும் 18-7-86 வெள்ளி மாலை ஞானகலாம்பிகை பரிபூரணமடைதல்; இரவு முத்துப் பல்லக்கும் ரிஷப வாகனக் காட்சியும், 19—7—86 சனி காலை திருவாரூர்ப் பிள்ளையைப் பிழைப்பித்தலும் இரவு கழுமரம் எரித்தலும் 20-7-86 ஞாயிறு மாலை சிவபெருமான் பிச்சைக்கு எழுந்தருளல்; இரவு பத்திரகிரியார் ஐக்கியமடைதல். 21-7-86 திங்கள் காலையில் ருத்திராபிஷேகம்; பகலில் பட்டினத்தடிகளின் குருபூஜை; இரவு ஸ்ரீ பட்டினத்தடிகள் சிவலிங்க ரூபமாகுதல்; பஞ்ச மூர்த்திகள் காட்சி. 22-7-86 செவ்வாய்க் கிழமை காலையில் பஞ்ச மூர்த்திகளும் திருவெண்காடரும் இடப வாகனக் காட்சியுடன் திருக்குளத்தில் தீர்த்தங் கொடுத்தல் 23-7-86 புதன் இரவு விடையாற்றியும் காப்பு அவிழ்த்தலும்.

திருமணம்

வெற்றியூரைச் சேர்ந்த திரு என் லெட்சுமணன் - டாக்டர் எல். காந்தி ஆச்சியின் புதல்வி செல்வி ஜெயலெட்சுமிக்கும் காரைக்குடி எஸ். பிஎல். வெள்ளையப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் இராமநாதனுக்கும் 16-4-86 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

Koviloor Digital Library

Koviloor Digital Library

காணக் கிடைக்காத காட்சி!

காரைக்குடியில் உள்ள இந்து மதாபிமான சங்கக் கட்டிடத்தை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ராபி. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையில் 24–10–52 அன்று திறந்து வைத்தபோது எடுத்த அரிய புகைப்படம் இது.

படத்தில் (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் 1. திருப்பூர் நா. இராமநாதன் செட்டியார் 2. தெரிய வில்லை 3. அ. ராம. இராமநாதன் செட்டியார் 4. சி. மு. அரு அரு. நாராயணன் செட்டியார் 5. எம், என். எஸ்டி. சிதம்பரம் செட்டியார் 6. நடேசன் செட்டியார் 7. சொ. முருகப்பா 8 சொ. முரு மரகதவல்லி அம்மையார் 9. சி. மு. அரு மு. வீரப்ப செட்டியார் 10. மூதறிஞர் இராஜாஜி 11, பனை மெ, மெ, வெங்கிடாசலம் செட்டியார் 12, கம்பனடிப்பொடி சா. கணேசனார் 13. க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார் 14, ரா. பி, சேதுப்பிள்ளை 15. அரு. சொ சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோர் உள்ளனர்.

பிளாக் உதவி :

அரு, ராம. முத்துராமன் செட்டியார், காரைக்குடி.

ஐந்து வயதுக் கிழவர்

சாலை வழியாகச் சென்று கொண்டிருந்த வயது முதிர்ந்த முனிவரைப் பார்த்து "ஐயா, தங்கள் வயது என்ன?" என்று கேட்டேன். அவர் "ஐந்து வயது" என்றார். "என்ன கேலியா செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர் "கடந்த எண்பது ஆண்டுகளாகக் கடவுளை உணர முடியாமல் மனதைத் திரை மூடியிருந்தது. திரை விலகி ஐந்து ஆண்டுகளாகத்தான் இறைவனை உணர முடிந்தது. ஆகவே இறைவனை உணரமுடிந்த வயதுதான் என் வயது" என்றார்,

—கேஆர். பழநியப்பன், தேவகோட்டை

அந்தப் பதினாறு

திருமணங்களில், பெரியவர்கள் மணமக்களை வாழ்த்தும்போது "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்துகிறார்கள். அந்தப் பதினாறு வகைச் செல்வங்கள் இவைதான் :–

புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், அறிவு, பெருமை, ஆயுள், நல்லூழ், இளமை, பொருள், துணிவு, நோயின்மை, நுகர்ச்சி.

—க. இராமநாதன் (B. Sc.)
சொக்கநாதபுரம்

Koviloor Digital Library

சிந்தனை செய் மனமே!

டாக்டர் மெ. மெய்யப்பன் M. Sc., Ph. D.,

1 பழங்கால நாணயங்கள் மற்றும் அவற்றின் காலம் பற்றிய அறிவியலுக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

2. உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமான ஒளியையும், வெப்பத்தையும் தவறாது கொடுத்துப் பாதுகாக்கும் சூரியனின் புற வெப்ப நிலை எவ்வளவு?

3. ஐரோப்பாக் கண்டத்தின் விளையாட்டு மைதானம் என்று அழைக்கப்படும் நாடு எது?

4. டெலிவிஷன் பேழையைக் கண்டுபிடித்தவர் யார்?

5. விண் மீன்கள் மினுமினுப்பது ஏன்?

6. ஹேபியஸ் கார்ப்பஸ் மனு (Writ of Habeas Corpus) என்றால் என்ன?

7. வெள்ளை அறிக்கை (Wh te Paper) என்றால் என்ன?

8. இந்தியாவில் எஃகு ஆலைகள் எங்கெங்குள்ளன?

9. இந்தியக் குடியரசின் முதல் குடியாட்சித் தலைவர் யார்?

10. நாடெங்கும் ஆசிரியர்கள் தினமாகக் கொண்டாடப்படும் நாள் எது? ஏன் அந்நாளில் கொண்டாடுகிறார்கள்?

11. மறைந்த பாரதத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி, என்று முதல் முதலாக தலைமை அமைச்சர் பதவியை ஏற்றார்?

12. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தரும், துணை வேந்தரும் யார்?

விடைகள்:

1 NUMISMATICS

2. 6000 டிகிரி செலிசியசு

3. சுவிட்சர்லாந்து

4. J. L. BAIRD

5. வானில் விண்மீன்கள் ஒளிர்வதில்லை. வளி மண்டலத்தின் அடுக்குகள் அசையக் கூடியதாக இருப்பதால் அதன் வழியே வரும் ஒளி சிதறி ஒளிர்வது போலத் தோன்றுகின்றது.

6. கைது செய்யப்பட்டவரையோ, சிறையிலிடப்பட்டவரையோ நீதிமன்றத்தில் கொணர்ந்து விசாரணை செய்யுமாறு கோரும் மனு.

7. குறிப்பிட்ட ஒரு பிரச்சனையில் ஆதாரப் பூர்வமான உண்மைகளை வெளியிட்டுத் தனது நிலையைத் தெளிவுபடுத்தும் அரசின் அறிக்கை.

8. ஜாம்ஷெட்பூர், பத்ராவதி, ரூர்கேலா, பிலாய், துர்காபூர், பொகாரோ மற்றும் சேலம்.

9. டாக்டர் ராஜேந்திர பிரசாத் (1950—1962)

10. செப்டம்பர் மாதம் 5-ம் தேதி. முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள்

11. 1966-ஆம் ஆண்டு ஜனவரி 24-ஆம் தேதி.

12. இணை வேந்தர்—
M A M இராமசாமி அவர்கள்.
துணை வேந்தர்—
S. V. சிட்டிபாபு அவர்கள்

Koviloor Digital Library

தவசு தாலாட்டு

திருமதி சேதுக்காரசி சிதம்பரம், பொன்.புதுப்பட்டி.

முக்கால் வலம் வந்து மூவிருகால் தென்டனிட்டு
அக்காள் கலிதீர ஆதிசிவன் தந்த கண்ணே
மாமதுரைப் பட்டணத்து மாதேவி மீனுட்சி
மாதர் குரல் கேட்டு மனமிரங்கி தந்த கண்ணே

முல்லை மலரோ முழுவயிரப் பூச்சரமோ
அல்லி மலரோ அணிவயிரப் பூச்சரமோ
தாழை மலரோ தனிவயிரப் பூச்சரமோ
எங்கள் குலம் விளங்க ஈஸ்வரியாள் தந்த கண்ணே

காஞ்சிபுரம் காமாட்சி கண்டெடுத்துத் தந்த முத்தோ
கடலூர் அபிராமி கடைந்தெடுத்துத் தந்த முத்தோ
ஆடிக் கடலில் அலசி எடுத்த முத்தோ
ஆலவாய் சொக்கர் தந்த ஆணிமுத்தோ கண்வளராய்

வேலவனை வேண்டி வெகுநாள் தவமிருந்து
பார்வதியை வேண்டி பலநாள் தவமிருந்து
வேலவனும் பார்வதியும் வேணுமென்று தந்த கண்ணே
பார்வதியும் வேலவனும் பார்த்தெடுத்துத் தந்த கண்ணே

ஐயாக்கள் கட்டிவைத் அழகுமணி மண்டபத்தில்
ஒய்யாரமாக நின்று உலகாள வந்தவனே
காட்டில் குடியிருக்கும் காட்டானை ஆயிரத்தை
வீட்டிலிருந்தே விலைமதிப்பார் உங்கள் ஐயா

பெருமைக்குரிய ஆச்சிமார்களே! உங்களது தாலாட்டுப் பாடல்களை, தாலாட்டுப் பகுதி "நகரத்தார் குரல்" 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 என்ற முகவரிக்கு அனுப்பி உதவுங்கள் அது பலருக்கும் பயன்படட்டும்.

Koviloor Digital Library

மாலைப் பொழுதுவர மான்கூட்டம் சேர்ந்துவர
கலைமான்கள் மத்தியிலே கவரிமான் வர
மானைப் பிடிப்பதற்கு மலையைவிட்டுக் கீழிறங்கி
மானுக்குக் கண்ணிவைக்கும் மன்னவராம் உன்தகப்பன்

கங்கை பெருகிவர காட்டாற்று வெள்ளம்வர
வைகைநதிப் பெருக்கை வடித்தெடுத்த ரத்தினமோ
திங்களணி சங்கரனார் திருக்கோயில் ரத்தினமோ
தில்லை சிவகாமி திருமுத்து ரத்தினமோ

தங்க விளக்கோ சரவணனின் கைவிளக்கோ
குத்து விளக்கோ கோயில் திருவிளக்கோ
வாடா மலரே வடபழனி செண்பகமே
தேடாமல் தேடிவந்த செல்வமே கண்வளராய்

சுவாமி பவனிவர சந்திரனும் கூடவர
கந்தன் பவனிவர கானமயி லாடிவர
சந்தனமும் குங்குமமும் தாயாரைத் தேடிவர
சிந்தை தெளியவைத்த செல்வமே கண்வளராய்

தாதி குரலோசை தணிகைமலை சங்கோசை
மாமி குரலோசை மாயவனின் சங்கோசை
தாயார் குரலோசை சாம்பசிவன் சங்கோசை
சித்தி குரல்கேட்டு செல்வமே கண்வளராய்

இலுப்பைக்குடியும், மாத்தூரும்

திருமதி ராம. லெ. நாச்சம்மை ஆச்சி, அலவாக்கோட்டை

வட்ட வட்ட ஊரணியாம்
வளஞ்செடுத்த தாமரையாம்
சுத்தித் திருமதிலாம் சூழ்ந்த நல்லகோபுரமாம்
இலுப்பைக்குடியாராம் இணைசேர்ந்த பட்டினத்தார்
சூடாமணி புரத்தான் சூழ்ந்த நல்ல கோபுரத்தான்
தான்தோன்றி ஈஸ்பரருக்கும் தையல் சவுந்தரிக்கும்
தான்பணிய வந்த தந்த தவப்பொருளோ
அடிபணிய வந்த ஆளவந்த ரஞ்சிதமோ
இலுப்பைக்குடியான் சூடாமணிபுரத்தான் எடுத்தாள வந்தாயோ
நகர மனுவுகளோ நலுங்காத நன்னாடோ
ஊராம் பெருந்துறையாம் கூராண்டான் ஊரணியாம்
மாத்தூரும் பூச்சப்பரமும் மணிமண்டபமும் உள்ளானே
கமலாலயமும் ஏழுகரைப் பிரிவும் எடுத்தாள வந்தாயோ
அன்னமிடும் மாத்தூரான் ஆளப் பிறந்தானே
சோறிடும் மாத்தூரான் துலங்கப் பிறந்தானே
எல்லாப் பிரிவையும் எடுத்தாள வந்தானே

சீதை அம்மன் தாலாட்டு

திருமதி லெ. உமையாள் ஆச்சி, சொக்கநாதபுரம்

பஞ்சவர்ணக்கிளியே பார்அளந்தார் சீர்மகனே
கொஞ்சி களர் வேண்டா கோகிலமே கண்வளராய்
பெற்றதாய் உற்றதெல்லாம் பிள்ளையிடம் சொல்லுகிறேன்
உற்றார் மதிஉரைக்க உண்மை சொல்ல கேள்மகனே
கங்கையிலே நான்பிறந்து தென்கடலிலே மிதந்தேன்

Koviloor Digital Library

பூங்கமுடன் பேழைதனில் பூமியிலே நான் வளர்ந்தேன்
ராஜ ஜனகரைப்போல் நைப்பொருளாக் கண்டெடுத்து
கோசிநகர் விளங்கும் பூங்கிளியே கேள்மகனே
அறுபது ஆயிரம் வருஷம் அரசாண்ட தசரதருக்கு
புத்திரருமில்லாமல் சுவாமி மித்திரக்கால் மேட்டைசெய்து
புத்திரர் உண்டான யாகத்தே மாயவரைப் பெற்றெடுத்த
ஏழுவயது தன்னில் இல்லாத வித்தை கற்றார்
தாழ்மையுள்ள தாடகையை சங்கரித்தார் உங்கள் அய்யா
வல்லவரும் மாமுனியும் மாயவரும் தம்பியரும்
கல்லை மிதித்தாக அகலிகை பிறந்தாளோ அப்பச்சிவ
சங்கர வாள் வில்முறித்து சீதை சிறைமீட்டாரோ
உன்தந்தை எந்தனையும் தீர்க்கமுடன் மாலையிட்டு
மாலையிட்ட பிற்பாடு வந்தகுறை கேள்மகனே
ஆலயத்தில் வந்தரியம் அன்னோர் வனம்போனோம்
வண்ணன் மதிகேட்டு வந்துமிருக்கையிலே உன்தந்தை
எந்தனையும் ஓட்டுமினார் காடடகத்தே அப்ப
அலறி வழிநடந்து ஆளும்தசை அயோத்தி நகரைவிட்டு
போகும்போது மீட்ட நரம்பதுபோல் மீண்டிருந்தாய் என் வயித்தே
கதறி வழி நடந்து காடுநோக்கிச் செல்கையிலே
கண்டிருந்த வால்மீகரும் கூட்டி அணைத்தாரோ
நீ குழந்தை பிறந்தாயோ வாரி அணைத்தாயோ
மைந்தன் பிறந்தாயோ ஆதிகுசலவர் அவதாரம் ஆனீரோ
சிறுதொண்ட வில்முறித்து செஞ்சலங்கைப் பொட்டுமிட்டு
மார்க்கண்ட ராஜா கையில் தம்பி
முத்து மாலைக்கு அழுதாயோ!

நகரத்தார் குரல்

உறுப்பினர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

அச்சுத் தாள் விலையேற்றம், அச்சுக் கூலி உயர்வு மற்றும் அதிகரித்துவரும் நிர்வாகச் செலவு ஆகியவற்றின் காரணமாக "நகரத்தார் குர"லின் உறுப்பினர் கட்டணத்தை ரூ 15-00லிருந்து ரூ 18-00க்கு உயர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

ஆகவே 1-7—86 முதல் "நகரத்தார் குர"லின் உறுப்பினர் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ 18-00 வீதமும் இதழ் ஒன்றின் விலை ரூ. 1-50 வீதமும் நிர்ணயிக்கப் பெறுகிறது.

உறுப்பினர்கள் இச் சிறிய விலையேற்றத்தைப் பொருட்படுத்தாது தங்களது தொடர்ந்த நல்லாதரவை அளிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

ஜூலை '86 இதழுக்கு முன்பாக உறுப்பினர் கட்டணம் செலுத்தியவர்கள் வித்தியாசக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

— ஆசிரியர்

Koviloor Digital Library

முத்தையா அண்ணன் ஒரு முடிசூடா மன்னன்

— கவிஞர் கல்யாணசுந்தரம் B. Sc., —
தேவகோட்டை

கொட்டிக் கொடுத்தாலும் பலகோடி கொடுத்தாலும்
செட்டிமகன் இவன்போலே எக்குடியில் எவன் பிறப்பான்?
'கெட்டும் பட்டணம்சேர்' என்பதுபோல் இளமையிலே சென்னைப்
பட்டணம் வந்து பார்புகழ வாழ்ந்த மகன்! — சிறுகூடல்
பட்டியில் பிறந்தாலும் காரைக்குடி நகர் வளர்ந்தான்;
தொட்டிலில் இருந்தே தூயதமிழ் தான்பயின்றான்;
ஒருத்தி மகனாய்ப் பிறந்தமகன்; கண்ணனைப் போல்
ஒருத்தி மகனாய் வாழ்ந்த மகன்!

நகரத்தார் மரபுதித்து நம்குலப் பெருமை காத்தமகன்!
பகலவனின் ஒளிக்கீற்று; அவன் பகுத்தறிவுப் பெட்டகம்!
உலகத்தார் வியந்துநின்ற உலகமாகவிக்குயில்!
இளமையிலே காதல் இன்பம் எனக் காமரசம் பேசியவன்—பின்
உளம் உணர்ந்து உருகியதால் பக்திரசம் பெருக்கியவன்
உலகமெலாம் "அர்த்தமுள்ள இந்துமதம்" பரப்பியவன்!
வாழ்நாளின் பெரும்நாளில் சிற்றின்பம் பேசியவன் – என்றாலும்
வான்புகழும் இறைஇசையை சாகும்வரை பாடியவன்!

முத்துமணி ரத்தினமாம்; அவன் முத்தமிழுக்கு அணிகலனும்! —
நமக்கவன்
முத்தையா அண்ணன்; தமிழ் உலகின் முடிசூடா மன்னன்!
இத்தரை போற்றிடும் சித்திரை நிலவாய்
முத்தமிழ் வீதியில் தனிராகம் பாடியவன்! — அவன்
தத்துவக் கருத்துக்கும் தமிழ்க் கவிக்கும் உரையானான்; ஏனோ
பெத்தடின் ஊசிக்கு மெல்ல மெல்ல இரையானான்?
கற்றோரின் நெஞ்சத்தில், காவியத்தில், வாழுகின்றான்;
எத்திசையும் வாழ்வாக எண்ணி எண்ணிப் போற்றிடுவோம்!



உமா
டிரேட்லிங்க்ஸ்
264-A, மேலமாசி வீதி
மதுரை-625 001.
போன்: 33367

Koviloor Digital Library

ஐக்கிய சங்கத்தின் கல்வி உதவி

சென்னை நகரத்தார் ஐக்கிய சங்கத்திலிருந்து நம் மாணவர்களுக்கு பட்டப் படிப்புகளுக்கும் பாலிடெக்னிக் படிப்பிற்கும் திரும்பச் செலுத்தும் வகையில் நிதி உதவி செய்வதாகவும் நம் மாணவிகளுக்கு மருத்துவம் பொறியியல் கல்விக்கு திரும்பச் செலுத்தும் வகையிலும் இதர பட்டப் படிப்புகளுக்கும் பாலி டெக்னிக் படிப்பிற்கும் இலவச நிதி உதவி செய்வதாகவும் அறிவித்துள்ளனர். கல்வி நிதி உதவி பெற விரும்புவோர் செயலாளர், நகரத்தார் ஐக்கிய சங்கம், 88. பவளக்காரத் தெரு, சென்னை-600 001 என்ற முகவரிக்கு எழுதி விண்ணப்பப் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

மாலை நேரக் கம்ப்யூட்டர் வகுப்பு

அழகப்பர் பல்கலைக் கழகத்தில் மாலை நேர் கம்ப்யூட்டர் வகுப்பு ஒவ்வொரு நாளும் நடைபெறுகிறது. இது 12 வாரப் படிப்பு. 4-4-86ல் இதில் 56 பேர் பயிற்சி பெறத் தொடங்கியுள்ளனர்.

அடுத்த கட்டமாக மாணவர் சேர்க்கை சூன் மாதம் நிகழும். பிளஸ் 2 தேர்வு பெற்றவர்கள் இதில் சேர்ந்து பயன் பெறலாம்

அழகப்பா பல்கலைக் கழகத்தில் புதிய வகுப்புகள்

அழகப்பர் பல்கலைக் கழகத்தில் பயனுள்ள பல புதிய 6 மாத வகுப்புக்கள் சூலை மாதம் தொடங்கப் பெறும். தமிழார்வம் உள்ளவர்கள் இந்தப் படிப்பு மூலம், வேலை வாய்ப்பும் பெற இடம் உள்ளது.

இந்த நான்கு வகுப்புகளுக்கு 20 பேர் வீதம் மொத்தம் 80 பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப் பெறுவர். விவரங்கள் பதிவாளரிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.

டாக்டர் தமிழண்ணல் அவர்களும், டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களும் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு துறை அறிஞர்களும் மின் வேதியல் நிபுணர்களும் சேர்ந்து இதற்கான பாடத் திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

அழகப்பர் பல்கலைக் கழகத்தில் தொடங்கப் பெறும் அனைத்துப் புதிய பாடங்களிலும் நம்மவர்கள் சேர்ந்து பயன் பெற வேண்டும்.

பாஸ்போர்ட், விசா, கப்பல்-விமான டிக்கெட்டுகள், உள்நாடு, வெளிநாடு, சுற்றுலாக்களுக்கும், தங்கும் வசதி நான்கு வேளை ஆகாரம் முதலியவைகளுடன் பேருந்து சுற்றுலாவிற்கும் அணுக வேண்டுகிறோம். பள்ளி, கல்லூரி மற்றும் குரூப்பாகச் செல்பவர்களுக்குச் சலுகையுடன் குறிப்பிடும் தேதியிலும் சிறப்பாக சுற்றுலா நடத்திக் கொடுக்கப்படும்.

SUBAM TRAVEL AGENCY

சுபம் டிராவல் ஏஜன்ஸி
226, நாயக்கர் புதுத் தெரு,
மதுரை-625001.
தொலைபேசி எண்: 22712
Prop: சொ. சுப்பிரமணியம்

Koviloor Digital Library

கண்டவராயன்பட்டி நூலகத்தின் சிறப்பான பணி

கண்டவராயன்பட்டியிலுள்ள மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகம் 1985-86 ஆம் ஆண்டு சிறப்பான பணியாற்றி உள்ளது. 1985 ஏப்ரலிலிருந்து 1986 மார்ச் வரையில் 10129 வாசகர்கள் வந்துள்ளனர். இதன் உறுப்பினர் தொகை 594. வாசகர்கள் 2237 புத்தகங்களை வாசித்துப் பயனடைந்துள்ளனர்.

தேவகோட்டை-திருச்செந்தூர் பாத யாத்திரை

தேவகோட்டையில் இருந்து 200 பேர் 17-4-86 அன்று பாத யாத்திரையாக திருச்செந்தூர் புறப்பட்டனர் திரு நெல்லியப்பன் காவடி தாங்கினர். திருத் தொண்டர் திரு ஆர் வயிரவன் வழிநடத்திச் சென்றார் 'காசிஸ்ரீ' திரு அரு சோமசுந்தரன் ஆசி கூறிப் பாத யாத்திரையைத் தொடங்கி வைத்தார். வழியில் சுமார் 300 பேர் யாத்திரையில் கலந்து கொள்ள 500 பேர் 24-4-86 காலையில் திருச்செந்தூர் சென்று மாலையில் காவடி பால் குடங்களைச் செலுத்திச் செந்திலாண்டவனை வழிபட்டனர். (8 நாட்களில் 150 மைல்கள் பயணம்) வழியில் தூத்துக்குடி, திருநெல்வேலி நகரத்தார்கள் இனிய வரவேற்பு வழங்கினர்கள்.

காரைக்குடி அரிமா சங்கக் கருத்தரங்கம்

காரைக்குடி அரிமா சங்கத்தின் சார்பில் தொழில் நுட்ப நுழைவுத் தேர்வுப் பயிற்சி வகுப்புக் கருத்தரங்கு 18-5-86 அன்று கம்பன் மணி மண்டபத்தில் நடைபெற்றது. அரிமா திரு ஞானசேகரன் வாவேற்றார் அரிமா சங்கத் தலைவர் திரு ஏஎல். சுப்பிரமணியன் செட்டியார் தலைமை தாங்கினர். பேராசிரியர்கள் பலர் கருத்துரை வழங்கினர்கள் 'காசிஸ்ரீ' திரு அரு. சோமசுந்தரன் ஆசி கூறினர். புலவர் மீனவன் நன்றி நவின்றார்.

கண்டரமாணிக்கத்தில் கந்தபுராணத் தொடர் சொற்பொழிவு

கண்டரமாணிக்கம் ஸ்ரீ மாணிக்க நாச்சி அம்மன் கோயிலில் ஸ்ரீ சங்கர ஜெயந்தி விழாக் குழுவின் சார்பில் மே 14 முதல் மூன்று நாட்கள் சங்கர ஜெயந்தி விழாக் கொண்டாடப் பெற்றது.

செல்வி மங்கையற்கரசி மீனாட்சி, செல்வி சோலையப்பன் ஆகியோர் இறைவணக்கம் பாடினர். புலவர் வேங்கடராமன் வரவேற்றார். 'பொற்கிழிக் கவிஞர்' திரு அரு சோமசுந்தரன் மூன்று நாட்களும் கந்த புராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினர். நிறைவு விழாவில் 'பொற்கிழிக் கவிஞ' ருக்கு திரு ராம. சி. சின்னஞ் செட்டியார் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

வைத்தீஸ்வரன் கோயில் பாதயாத்திரை

16-4-86 அன்று நகரத்தார்கள் அவரவர் ஊர்களிலிருந்து இரவு சுமார் 1 மணிக்குப் புறப்பட்டு பாதயாத்திரையாக புதுக்கோட்டை சென்று 17-4-86 இரவு புதுக்கோட்டை மச்சு வாடியில் ஒன்றாகச் சேர்ந்து 22-4-86 செவ்வாயன்று அதிகாலை 6 மணி அளவில் வைத்தீஸ்வரன் கோயில் போய்ச் சேர்ந்து முத்துக்குமார சுவாமியை வழிபட்டனர். இந்த ஆண்டு பாத யாத்திரையில் 1500 பேர் கலந்து கொண்டனர். 48 வண்டிகள் வந்தன.

Koviloor Digital Library

நாட்டரசன் கோட்டையில் மணிவிழா கவியரங்கம்

நாட்டரசன் கோட்டையில் திரு. சிக. ராம. ராம. சோம. சுப்பிரமணியம் செட்டியார்–திருமதி வள்ளியம்மை ஆச்சி அவர்களின் மணி விழாவையொட்டி கவியரங்கம் ஒன்று 10-4-86 காலையில் 'நாங்கள் வாழ்த்துகிறோம்' எனும் பொதுத் தலைப்பில் நடைபெற்றது. கவியரங்கிற்குப் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் தலைமை தாங்கினார், பேராசிரியர் திரு. எஸ் பி. இராமநாதன் அனைவரையும் வரவேற்றார்.

''மகன்கள் வாழ்த்துதல்'' பற்றி கவிஞர் வே. வேலப்பனும், 'மகள்கள் வாழ்த்துதல்' பற்றி கவிஞர் சிவல்புரி சிங்காரமும் 'பேத்திகள் வாழ்த்துதல்' பற்றி கவிஞர் அரு. சுந்தரமும், 'சுற்றத்தார் வாழ்த்துதல்' பற்றி கவிஞர் சுப. சுந்தரமும் கவிதை பாடினார்கள் திரு. குருசாமி நன்றி கூறினார்.

பாடுவார் முத்தப்பர் கோட்டம்

பாடுவார் முத்தப்பர் கோட்டக் குழுவின் கூட்டம் கீழச் சிவல் பட்டியில் அதன் தலைவர் ஆர் எம். முத்தையா அவர்கள் தலைமையில் 17-5-86 ல் நடைபெற்றது.

மலர்க் குழுவின் பொருளாளர் காரைக்குடி அ. மு. க. மு. சித. மு. சிதம்பரம் அவர்கள் அண்மையில் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் பலரையும் சந்தித்த விவரங்களை எடுத்துரைத்தார்கள்

31–3-86 வரை உள்ள கணக்குகள் படிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆயுள் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை 19-5-86 முதல் தொடங்குவதென்று அக் கூட்டத்தில் முடிவு செய்யப் பெற்றது.

கல்விச் செய்திகள்

அழகப்பர் பல்கலைக் கழகத்தில் M, Sc., (Textile Chemistry) படிப்பு தொடங்கப் பெற்றுள்ளது இது எலக்ட்ரோ கெமிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் கட்டிடத்தில் இப்போது கற்பிக்கப்படுகிறது 1986 சூன்-சூலையில் இதில் மேலும் 10 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுவர். M. Sc., (Industrial Chemistry) யிலும் மேலும் 10 மாணவர் சேர்த்துக் கொள்ளப் பெறுவர்.

∴ ∴

M. C. A (Master of Computer Applications) என்ற முன்றாண்டுப் பட்டப் படிப்பும் அழகப்பர் பல்கலைக் கழகத்தில் விரைவில் தொடங்கப் பெறும். பி. எஸ்ஸி, படித்தவர்கள் இதில் சேரலாம்,

ஸ்கிரீன் பிரிண்டுக்குத் தேவையான சாமான்களும்
'இங்க்' மற்றும் எல்லாவிதமான பேப்பர்களும்
கிடைக்குமிடம்:

தனலெட்சுமி பேப்பர் மார்ட்

452, N. H. ரோடு,

கோயமுத்தூர் - 641 001 போன்: 24482

Distributors: Coates of India Ltd.
Dealers : Kores (India) Ltd.

Koviloor Digital Library

45772 LIBRARY, KOVILOOR

உங்கள் குரல்

'நாள் ஒன்று-நகரக் கோயில்கள் ஒன்பது' என்ற கட்டுரையைத் தங்களது மே '86 இதழில் கண்டேன். அக்கட்டுரையைப் படித்தபோது சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்ட உணர்வு எனக்கு ஏற்பட்டது. கட்டுரையாளர் எல். சுந்தரம் அவர்களுக்கு எனது நன்றி.

எல். முத்துப்பழநியப்பன்
நெற்குப்பை

சென்ற இதழில் தாலாட்டுப் பகுதி வெளிவராதது ஒரு குறை. ராசி பலனும் சமையல் குறிப்பும் வெளியிட்டால் நம் குரல் மெருகேறும்.

ஸ்ரீ தேவி
தேவகோட்டை

மே '86 இதழில் வைரவமூர்த்தி வைரமாக ஜொலித்தார். வி. என். சிடி. அவர்களின் கட்டுரை சுவையான பல நிகழ்ச்சிகளை விவரிக்கிறது. ஒன்பது நகரக் கோயில் கட்டுரையைப் படிக்கும்போது நாமும் மதுரை வாழ் நகரத்தாராக இல்லாமற் போய்விட்டோமே என்ற ஏக்கம் ஏற்படுகிறது.

ஆர். நாகராஜ்
வலையபட்டி

வி. என்.சிடி. அவர்களின் வெளி நாட்டு அனுபவக் கட்டுரை உண்மை வரலாறு ஆகும். செய்திகள் வாசிப்பவர்... பகுதி, பயனுள்ள பகுதி. 'நாள் ஒன்று, நகரக் கோயில்கள் ஒன்பது' கட்டுரையைப் படித்து மகிழ்ச்சியடைந்தேன்.

ஜெய்ஹிந்த் சேதுராமன்
கோனுபட்டு

ஒன்பது நகரக் கோயில் தரிசனம் கிடைத்தற்கரிய பேறு ஆகும். அதற்கு ஏற்பாடு செய்த மதுரை நகரத்தார் சங்கத்திற்கும் வீடியோ படம் எடுத்த எம். சிஎன். மாணிக்கம் அவர்களுக்கும் கட்டுரைவெளியிட்ட ''நகரத்தார் குர''லுக்கும் மிக்க நன்றி.

எல். கேஆர். வள்ளியப்பன்
குருவிக்கொண்டான்பட்டி

நாட்டரசன்கோட்டை வெ. கண. வெள்ளையப்ப செட்டியார் அவர்கள் இயற்கை எய்திய செய்தியை விரிவாகவும் படத்துடனும் வெளியிட்ட ''நகரத்தார் குர''லுக்கு நன்றி.

கண. சுப்பிரமணியன்
நாட்டரசன்கோட்டை

வி. என். சிடி. அவர்களின் அனுபவங்கள், டாக்டர் மேனுவின் எண்ணங்கள், எல்லெஸ்ஸின் செய்திகள் மட்டுமல்ல எண்ணற்ற பல செய்திகளைக் கொண்டுள்ள மே '86 இதழ் கற்கண்டுதான்.

வே. முருகப்பன்
சென்னை

திருமணம்

தேவகோட்டை, அமரர் சேவு. லெ. பழநியப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் எல். பி. நாராயணனுக்கும் பி அழகாபுரி, அமரர் அழ. அரு. திருஞானம் செட்டியார் அவர்களது புதல்வி செல்வி செந்தாமரைக்கும் பி. அழகாபுரியில் 22-5-86 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

Koviloor Digital Library

எனது புதல்வன் அழகப்பனின் பேத்தியும் எனது பேரன் Dr. AL. அண்ணுமலையின் புதல்வியுமான திருவளர் செல்வி தேவி என்கிற பார்வதி B. A. (P. G. D. C) க்கும் காரைக்குடி டாக்டர் சா. நா. சா. சொ. சா. சாத்தப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் திருவளர் செல்வன் ஸ்ரீநிவாசன் B.E. க்கும் 30-4-86 அன்று கோட்டையூரில் எங்களது இல்லத்தில் நடைபெற்ற திருமணத்திற்கு நேரில் வந்து கலந்துகொண்டு வாழ்த்தியவர்களுக்கும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களன்புள்ள

ராம. அழ. சித. அழ. அ.
அண்ணுமலை செட்டியார்

கோட்டையூர்

Koviloor Digital Library

ஐந்தாமாண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16-2-1930 மறைவு: 27-6-1981

லெட்சுமி M. சிங்காரம் செட்டியார்

அச்சடிக்கும் காகிதத்தின் அரசர் ஆனார்
அறப்பணிகள் தொடங்குங்கால் அமரர் ஆனார்
நிச்சயமாய் லெட்சுமிசிங் காரம் செய்த
நிகரில்லாத் தனிச்சேவை நெஞ்சில் நிற்கும்

லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்

38, கீழ ஆவணி மூல வீதி, மதுரை-625 001

தந்தி : 'Paper Queen' தொலைபேசி : 22273
" 30052
(இல்லம்) 41704